விலை : 20.00
பக்கங்கள் : இருபது


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 13 வியாழக்கிழமை (30.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 315

## பதுளையை அதிரவைத்த
# பாரிய மண் சரிவு
## 30 சடலம் மீட்பு, 300 பேரை காணவில்லை



(பதுளை) பதுளை ஹல்துமுல்ல மிரியாபெத்த பிரதேசத்தில் இடம்பெற்ற மண் சரிவில் சிக்குண்ட 300 பேரைக் காணவில்லை என்று அதிகார பூர்வமாக அறிவிக் கப்பட்டுள்ளது. 600 பேர் வரை புதை உண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதுவரை 30 க் கும் அதிகமான சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் காணாமல்போன 300 பேரும் உயிரிழந்திருக்கலாம் எனவும் அதிகாரிகள் கூறுகின்றனர். 19 ஆம் பக்கம் பார்க்க....

## சாட்சியம் அளிப்பவர்கள் கைதுக்கு
# ஐ.நா.கண்டனம்

(ஜெனிவா)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் முன்னெடுக்கப்படும் இலங்கை மீதான விசாரணைக்கு சாட்சியம் அளிக்கும் நபர்கள் கைது செய்யப்படுவது தொடர்பில் கொழும்பில் உள்ள ஐ.நாவின் தலைமை அலுவலகம் இலங்கை அரசாங்கத்திடம் கண்டனம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் முன்னெடுக்கப்படும் இந்த விசாரணைக்கு சாட்சியம் அளித்த நபர் ஒருவர் கிளிநொச சியில் வைத்து 20 ஆம் பக்கம் பார்க்க....

# போர் உளப் பாதிப்புக்களால் வடக்கில் நோய்கள் அதிகரிப்பு
## யாழ். மருத்துவர் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் பின்னர் தீர்வு அற்ற நிம்மதியற்ற வாழ்க்கையும் யுத்தத்தின் இழப்புக்களினால் ஏற்பட்ட உளச் சோர்வுமே வடக்கு மாகாண மக்களினை நோயாளிகளாக்குகின்றது என யாழ்ப்பாண மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாரிசவாதத்தினால் ஏற்படும் இழப்புக்களினையும்பாதிப்புக்களினையும் தடுத்தல் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பொன்று யாழ் போதானா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது. இதன்போதே 19 ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கில் இராணுவத்தை குறைக்க வேண்டும்
## கமலேஷ் சர்மா வலியுறுத்து

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் தலைமைச் செயலர் கமலேஷ் ஷர்மா தனது இலங்கை பயணத்தின் நிறைவில் வட இலங்கையில் இராணுவத்தினரின் பிரசன்னமும் செயற்பாடுகளும் குறைக்கப்பட வேண்டும என்க் கேட்டுக்கொண்டுள்ளார்.



யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த வடமாகாணத்தில் சிவிலியன் வாழ்க்கையில் இராணுவத்தினரின் பங்கு தொடர்ந்து குறைவதென்பது தமிழ் மக்களு 19 ஆம் பக்கம் பார்க்க....

# பாப்பாண்டவர் வருவது உறுதி

(கொழும்பு)

பாப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸின இலங்கை விஜயம் திட்டமிட்டவாறு நடைபெறும் என இலங்கை ரோமன் கத்தோலிக்க தேவாலய திருச சபை அறிவித்துள்ளது. ஏற்கெனவே திட்டமிட்டவாறு 19 ஆம் பக்கம் பார்க்க....

# அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தை அதன் பின்னரே தெரிவுக் குழு



## த.தே.கூட்டமைப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசுடன் நேரடியாக பேசி எடுக்கும் தீர்மானத்தை தெரிவுக்குழுவில் முன்வைத்து பேசுவதற்கு தயார் என யாழ் வந்த அவுஸ்திரேலிய குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த அவுஸ்திரேலிய உயாமட்ட குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வடக்கு மாகாண சபையில் வைத்து சந்தித்திருந்தது.

இச்சந்திப்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இச்சந்திப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜா வலம்புரிக்கு தெரிவிக் 20 ஆம் பக்கம் பார்க்க....

ஆர்ப்பரித்தெழுந்தது இளைஞர் கூட்டம்
அலைமோதுகின்றது திசைகாட்டிக்கு-செங்கன் விசாவிற்கு

ஆம்!


யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக 100% விசா உறுதிப்பாட்டுடன் செங்கன் நாடுகளான ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே... போன்ற நாடுகளில் படிக்க பகுதிநேரமாக வேலை செய்ய 2 வருட விசா 14 பேர் பதிவு 4 பேர் விசா வெற்றியும் அடைந்துள்ளனர் என்பதை பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் அறியத்தருகின்றோம்.

இன்று முதல் புதிய கட்டணமான வெறும் 14 இலட்சத்துடன் மேற்படி நாடுகளில் படிக்க உழைக்க பறக்கலாம்.

(அனைத்தும் நிபந்தனைகளுக்குட்பட்டது)
ஏழு நாட்களும் திறந்திருப்போம்

(C-8902)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016,



அரச பதிவுக்கு உட்பட்டது. பதிவு இலக்கம்–PV82703

# குக்கர் தீவிபத்தில் சிக்கி குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் குக்கரில் சமைத்துக் கொண்டிருக்கும் போது தீவிபத்திற்கு உள்ளான குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்தவரும் இரண்டு பிள்ளைகளின் தாயாருமான ஜெயசிங்கம் ரெஜிவதனி (வயது 51) என்பவரே இவ்விபத்துச் சம்பவத்தில் உயிரிழுந்தவராவார். 20 ஆம் பக்கம் பார்க்க....

# புலிகளின் தடையை இந்தியா நீக்காது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை இந்தியா எந்த சந்தர்ப்பத்திலும் நீக்காது என நம்புவதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பிரதீப மஹறாநாம ஹேவா தெரிவித்துள்ளார். இந்தியாவில 20 ஆம் பக்கம் பார்க்க....

# 164 கிராமங்களுக்கு மின் வசதி இல்லை


(கொழும்பு)

வடமாகாணத்தில் மின்சார வசதிகள் அற்ற நிலையில் 164 கிராமங்கள் இருந்து வருகின்றன. இக் கிராமங்களுக்கான மின்சார இணைப்புடனான வசதிகளை எதிர் வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பதாக பெற்றுக் கொடுக்கப்படும் 20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜெயாவை சந்தித்தார் பன்னீர்



(சென்னை)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், அதிமுக பொதுச் செயலாளருமான ஜெய லலிதாவை தற்போதைய முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் போயஸ் கார்டன் இல்லத்தில் நேற்று புதன்கிழமை சந்தித்துப் பேசினார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதும், பிணையில் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட எவரையும் சந்திக்காமல் இருந்து வந்தார் ஜெயலலிதா.

இந்நிலையில் நேற்று முதல் முறையாக ஓ.பன்னீர்செல்வம் மற்றும் மூத்த அமைச்சர்களான நத்தம் விஸ்வநாதன் மற்றும் வைத்திலிங்கம் உள்ளிட்டோரை தனது வீட்டுக்கு அழைத்து ஜெயலலிதா பேசியுள்ளார்

தமிழகத்தில் பெய்து வரும் வட கிழக்குப் பருவ மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் தமிழக அரசு நிவாரணப் பணிகளை சரிவர செய்யாமல் இருப்பதாக திமுக தலைவர் கருணாநிதி உள்ளிட்ட எதிர்க் கட்சியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இந்தப் பின்னணியில் ஓ.பன்னீர் செல்வத்தை அழைத்து ஜெயலலிதா ஆலோசனை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜெயலலிதா பிணையில் விடுதலையாகி வந்த பின்னர் இடம்பெற்ற முதல் சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


## வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு அளவான நல்ல நிலையிலுள்ள வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. யாழ் நகரை அண்டிய பகுதியில் விரும்பத்தக்கது.

தொடர்பு:-0782845123, 0773895395

(ஸ்ரீ-8909)



SPEED

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)

விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 5392

(ஸ்ரீ-8907) (ஸ்ரீ-8284)


## ஐஸ் கிறீம் உற்பத்தியாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஐஸ்கிறீம் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கத்தினை சந்திக்கவுள்ளனர்.

இச் சந்திப்பு யாழ்.வணிகர் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.


இதில் கலந்து கொள்ளும் ஐஸ்கிறீம் உரிமையாளர்கள் தங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (செ-4)

## பேச்சி அம்மனுக்கு அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வடக்கு மதவடி வீதி அருள்மிகு பேச்சி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். தினமும் காலை 9 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று பூசை வழிபாடுகள் நடைபெறும்.

எதிர்வரும் நவம்பர் 6-ம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று மாலை அம்மன் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (ந)



கந்தஷஷ்டி இறுதிநாளான நேற்று நல்லூர் முருகன் கோவிலில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் முன் சூரன்போர் நிகழ்வு இடம்பெற்றது.

## வரையறுக்கப்பட்ட பெண்களின் பங்களிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் வரையறுக்கப்பட்ட வகையில் காணப்படுகிறது என்று தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது உலக பொருளாதாரப் பேரவை. இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

பெண்களின் அரசியல் வலுவூட்டல் தொடர்பில் இலங்கை 50 ஆவது இடத்தை வகித்து வருகிறது. பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் பதவி வகித்தல் குறித்த சுட்டியில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. 142 நாடுகளைக் கொண்ட பட்டியலில் இலங்கை இந்த வகையீட்டில் 136 ஆவது இடத்தை வகிக்கின்றது. பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு தொடர்பிலான வகையீட்டிலும் இலங்கை 109ஆவது இடத்திலுள்ளது. இந்த வகையில் அரசியல், பொருளாதாரம், ஊழியப் படை போன்ற துறைகளில் இலங்கை பாரிய பின்னடைவையே எதிர் நோக்கியுள்ளது. ஆனாலும் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் பெண்கள் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் உள்ளது. (செ-11)

## மதுபான விலை மீண்டும் அதிகரிப்பு

மதுபானங்களின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளதாக டீ.சி.எஸ்.எல் நிறுவனம் அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் மதுசாரத்துக்கான (ஸ்பிரிட்) இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டதை அடுத்தே மதுபானங்களில் விலைகள் கடந்த 25 ஆம் திகதி முதல் அதிகரித்துள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் அதிவிசேட மதுபானம் போத்தலொன்று 30 ரூபாயினாலும், ஏனைய மதுபான போத்தல்கள் 20 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதி கலால் வரி அதிகரிக்கப்பட்டதால் மதுபான போத்தலொன்று 30 ரூபாய் முதல் 60 ரூபாய் வரையிலும் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)


## வேலைவாய்ப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி

நீங்கள் எதிர்பார்ப்பது கௌரவமான நிரந்தர தொழிலா? உங்கள் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய மாதாந்தம் ரூபா 60000.00 உழைத்து எதிர்கால வாழ்வை சிறப்பாக அமைத்துக்கொள்ள அருமையான தொழில்வாய்ப்பு (Excutive)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் துறையில் அக்கறையுள்ள பாடசாலையை விட்டு விலகியவர்களும் நிரந்தர (தொழில்) வருமானத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் 18-30 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

0777274795/ 0215686466

73, St.Annes Church Road, Chundikuly-Jaffna.

(ஸ்ரீ-8912)


## மரண அறிவித்தல்

### சின்னையா-சுப்ரமணியம்



மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் 773, ஆறுமுகம் வீதி வட்டக்கச்சி கிளிநொச்சியைப் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுப்ரமணியம். 28.10.2014 செவ்வாய்க் கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-செல்லாச்சி தம்பதிகளின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், பத்மாவதி (ஜேர்மனி), மனோகரன் (நோர்வே), மவுலேசன் (லண்டன்), சுமதி (ஜேர்மனி), கோமளா (லண்டன்), கோகிலா (ஜேர்மனி), கோசலா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமாரானந்தம் (ஜேர்மனி), சங்குபதி (நோர்வே), மாலினி (லண்டன்), தியாகராசா (ஜேர்மனி), சுவர்ணசிங்கம் (லண்டன்), தங்கேஸ்வரன் (ஜேர்மனி), சிவரூபன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சின்னத்தங்கம், பூலோகம், கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்- மட்டக்களப்பு), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் நடராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராசுபதி (கொழும்பு), கந்தராசா (ஜேர்மனி), செல்வரட்ணம் (வவுனியா), திலகவதி (கொக்குவில்), காலஞ்சென்ற ஜெயலட்சுமி, வசந்தாதேவி (ஆசிரியை கொழும்பு), மீனாம்பிகை (ஆசிரியை கொழும்பு), விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரோசா, நிதுபா, நிதுசன், மகிந்தன், நொயின்சன், மோனிசா, பவிசா, யபிசா, கீர்த்தனா, கீர்த்தியன், ரஜிக்கா, கேனுத், சஞ்சு, லக்சனா, கபிலன், நவிந்தன், தானிஸ், தனுஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.10.2014 இன்று வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மம்மில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.773, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி கிளிநொச்சி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
0243246721, 0770315245

(8186)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### ஜெயகுருநந்தன் சுரேஸ்



தாயின் மடியில்
1995 - 09 - 17

கடலன்னை மடியில்
2014 - 09 - 18

பத்து மாதம் சுமந்து
பெற்ற அன்னையை விடவும்
பாசத்தாய் கடலன்னை
மடி மீது தவழ்ந்தவனே--சுரேஸ்

வித்தைகள் பல காட்டி
சில காலம் எம்மை எல்லாம்
வியக்க வைத்து மண்ணுலகை விட்டு
விண்ணுலகம் சென்றாயே--சுரேஸ்

கத்துகின்றோம் கதறுகிறோம்
கதி கலங்கி தவிக்கின்றோமடா--சுரேஸ்
வித்தாக உன் புகழை
விக்றோரியா கல்லூரியில் சொல்லால்
சொல்லுதையா நீ இன்னும்
சாகவில்லை என்பதனை --சுரேஸ்

மறவாத நினைவெனும்
எண்ணெய் ஊற்றி--அதில்
அணையா தீபம் ஏற்றி
என்றும் உன் நினைவுடன்
உன் ஆத்மா சாந்திபெற
இறைவனை பிரார்த்திக்கின்றோம்

இங்ஙனம்
அப்பா S.ஜெயகுருநந்தன்
அம்மா J.அனுசியா
(குடும்பத்தினர்)

(8185)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மையினருக்கு சார்பாகவே அமைச்சர் பந்துல செயற்படுகின்றார்

## பிரபா கணேசன் குற்றச்சாட்டு

அமைச்சர் பந்துல குணவர்தன பெரும்பான்மையினருக்குச் சார்பான கல்வி அமைச்சராகவே செயற்படுகின்றார் எனக் குற்றஞ்சாட்டியிருக்கிறார் பிரதியமைச்சர் பிரபா கணேசன். "மஹிந்தோதய்யா" திட்டத்தின் கீழ் கொழும்பின் எந்தவொரு தமிழ் பாடசாலைக்கும் தொழில்நுட்ப ஆய்வுகூட வசதிகள் வழங்கப்படாதமையை உதாரணம் காட்டியே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அத்துடன், மலையக மக்கள் பற்றிய சிந்தனை இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்புக்கான விவாதத்தில் உரையாற்றியபோதே இதனைக் கூறினார் பிரபா எம்.பி. அவர் அங்கு மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு. "சிங்கள மொழியில் கவியொன்றைப் பாடி வரவு - செலவுத் திட்ட உரையைக் கல்வி அமைச்சர் முடித்துள்ளார்.

ஆம்! பெரும்பான்மையினருக்குச் சார்பான கல்வி அமைச்சராகத்தான் அவர் செயற்படுகின்றார். மஹிந்தோதயா திட்டத்தின் கீழ் கொழும்பில் உள்ள எந்தத் தமிழ் பாடசாலைக்கும் தொழில்நுட்ப ஆய்வுகூட வசதி வழங்கப்படவில்லை. இதேவேளை, அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைத்துச் செயற்படவேண்டும்.

அபிவிருத்தியுடன் இணைந்து அதிகாரப் பரவலாக்கலும் இடம்பெற வேண்டும் என்பது உண்மை. ஆனால், இரண்டும் சமாந்தரமாக இடம்பெறவேண்டும். கூட்டமைப்பு, மக்களை ஒரு திசையை நோக்கியே அழைத்துச் செல்கின்றது.

இந்த அரசு சிறுபான்மையினருக்கு எதிரான அரசு அல்ல. அத்துடன், வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு எதுவுமில்லை எனக் கூறும் கூட்டமைப்பு, மலையக மக்களுக்கும் ஒன்றுமில்லை என்பதையும் குறிப்பிடவேண்டும்.

மலையக மக்கள் இன்றும் 10 அடி லயன் அறைகளிலேயே வாழ்கின்றனர். அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படவேண்டும்: இதுபற்றி ஜனாதிபதியுடன் நாம் பேசுகிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அமர்வுக்கு செல்ல முன் மருத்துவ பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கைதடியிலுள்ள வடமாகாண சபை கட்டடத் தொகுதியிலேயே இந்த மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற்றன.

வடமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த மருத்துவ பரிசோதனையில் உயர் குருதி அமுக்கம், கண்பார்வை, உயரம், நிறை, இரத்த பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகள் இடம்பெற்றன.

இந்தப் பரிசோதனைகளை யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிமனையினர் மேற்கொண்டனர்.

வடமாகாண சபையின் மாதாந்த அமர்வு கைதடியில் அமைந்துள்ள வடமாகாணசபை கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக முன்னரே இந்தப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த வைத்திய பரிசோதனை குறித்து யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

தொற்றாத நோய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை இலங்கை பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தின் கீழ் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களுக்கு அருகிலுள்ள வைத்தியசாலைவகளில் தங்களை மருத்துவ பரிசோதனைக்குட்ப்டுத்தி கொள்ள முடியும்.

இருந்தும் யாழ்.மாவட்டத்திலுள்ளவர்கள் நோய் ஏற்பட்ட பின்னரே வைத்தியசாலைகளுக்கு வருகின்றனர். முன்னதாக வந்து பரிசோதனைகளை மேற்கொள்வது கிடையாது.

அந்த வகையில் அவ்வாறனவர்களை நோய் ஏற்படமுன்னரே வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தும் நோக்குடன் இந்த மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# தாய்க்கு கோவில் கட்டும் நடிகர் ராகவா லாரன்ஸ்

நடிகர் மற்றும் இயக்குநர் ராகவா லாரன்ஸ் தனது தாயாருக்கு கோயில் கட்ட முடிவு செய்துள்ளார். தனது தந்தையின் சொந்த ஊரான பூவிருந்தவல்லியில் இந்த கோயில் கட்டப்படவுள்ளது. இதற்கான வேலைகள் தொடங்கிவிட்டன. அடுத்த வருடம் இது திறக்கப்படும் எனத் தெரிகிறது.

இது குறித்து பேசிய ராகவா லாரன்ஸ், "என் அம்மா கண்மணி உயிருடன் இருக்கும் போதே அவருக்காக ஒரு கோயில் கட்ட வேண்டும் என்பது எனது கனவு. நான் இந்த உலகத்தில் இருக்கக் காரணம் என் அம்மா. குழந்தைகளுக்காக தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணிக்கும் ஒவ்வொரு அம்மாவுக்கும் இந்தக் கோயிலை சமர்ப்பிக்கிறேன். எனது தாயின் சிலை ராஜஸ்தானில் உருவாக்கப்படுகிறது. அடுத்த வருடம், மிகப்பெரிய விழா ஒன்றை நடத்தி கோயிலை திறக்கவுள்ளேன்" என்று தெரிவித்தார்.

மேலும், தன்னை வளர்க்க தன் தாய் பட்ட கஷ்டங்கள் குறித்து ஒரு புத்தகத்தையும்

# பொலிஸ் கான்ஸ்டபிளின் நகம் பரிசோதனைக்கு அனுப்பி வைப்பு

கொழும்பு, வெள்ளவத்தை கடற்கரையோரத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட, மாத்தளையைச் சேர்ந்த 27 வயதான கான்ஸ்டபிள் சுனில் ஆரியரத்னவின் முடி, நகம் மற்றும் இரத்தத்தை பரிசோதனைக்கு அனுப்பிவைக்குமாறு நீதவான் பணித்துள்ளார்.

கொழும்பு நீதிமன்ற வைத்திய அதிகாரி பிரதீப் செனவிரத்னவே, நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மேற்கண்டவாறு பணித்தார்.

வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய அவர், கடந்த திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (இ)

# மாட்டுத்தலைகள் வைத்து அச்சுறுத்தல்

(கொழும்பு)

இரண்டு மாடுகளின் வெட்டப்பட்ட தலைகளுக்கருகில் எச்சரிக்கை என தலைப்பிடப்பட்ட பதாதைகள் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவையடி சந்தியில் நேற்று புதன்கிழமைகாலை மீட்கப்பட்டுள்ளன.

"எங்கள் காணிக்குள் இருந்து மாடுகளை வெளியேற்றாவிட்டால் அதற்கு ஏற்படும் நிலைமைதான் உங்களுக்கும் நடக்கும்" என அப்பதாதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அம்பாறை, வட்டைமடு காணிப்பிரச்சினை தொடர்பான விசாரணை பொத்துவில் நீதிமன்றத்தில் நேற்று நடைபெறஇருந்த நிலையில் இவ்வாறு மாடுகளின் தலைகள் வைத்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


# விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com


# இராசி பலன்

30.10.2014
(ஐப்பசி 13, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.57 மணிக்கு
சப்தமி முன்னிரவு 8.38 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 2.08 மணிவரை
இராகுகாலம்-1.33-3.03 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை

வளவன்

**மீனம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், நட்பு வட்டம் விரிவடையும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்சி தரும்.

**மேடம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள், நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக இடம் பெறலாம், ஆதாயம் தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மிதுனம்** சில பிரச்சினைகள் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, தேவையற்ற செலவுகள் அதிகமாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**கும்பம்** சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், சயன சுகக் குறைவான நாள், உறவினர்களால் மனஸ்தாபங்கள் ஏற்படலாம், சுப செலவுகளில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கடகம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், ஆரோக்கியம் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்களின் ஒத்தாசைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பயணங்களால் பலனுண்டு, கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** உறவினர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிபுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவுனர் நாளும் பரிசளிப்பு விழாவும்


(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுனர் நாள் மற்றும் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திறந்த வெளியரங்கில் கல்லூரி அதிபர் திருமதி சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.




இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பணிப்பாளர் ஆ.ராஜேந்திரனும் சிறப்பு விருந்தினராக கொழும்பு லங்கா வைத்தியசாலையின் சிரேஷ்ட இருதய சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஞா. காந்திஜீயும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை இந்நிகழ்வின் நிறுவுனர் நினைவுப் பேருரையினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் இந்து நாகரீக நுண் கலைத்துறைத் தலைவரும் ஓய்வு நிலை முதுநிலை விரிவுரையாளரும் பழைய மாணவர் சங்க தலைவருமான திருமதி நா. செல்வநாயகம் ஆற்றவுள்ளார். (இ




# மது பாவனையை ஒழிக்க விழிப்புணர்வு போராட்டம்

(கொழும்புத்துறை)

மதுபானத்திற்கு வழங்கப்படும் நியாயமற்ற சலுகைகளை ஒழிக்கும் வேலைத்திட்டத்தின் செயற்பாடாக விழிப்புணர்வு போராட்டம் ஒன்று யாழ்.சிறைச்சாலை முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றது.

இவ் விழிப்புணர்வு போராட்டமானது யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஏ.சி.பெரேரா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மதுபானம் குடித்து விட்டு காட்டும் முறையற்ற நடத்தைகள் யாவும் வெறும் பொய்யான நாடகங்களே அவற்றிற்கு அனுமதியோ மன்னிப்போ வழங்க வேண்டாம் எனும் தொனிப் பொருள் அடங்கலான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு வ்ழங்கினார்கள். குறிப்பாக பிரதான வீதியில் செல்கின்ற வாகனங்கள் அனைத்திலும் மேற்படி விழிப்புணர்வு தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டு இவ் விழிப்புணர்வு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ் விழிப்புணர்வு போராட்டத்தில் யாழ்.பிரதம சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் , யாழ். மாவட்ட சாரணர் அணி ஆணையாளர் செ.தேவரஞ்சன் , தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் ஐ.தபேந்திரன், யாழ்ப்பாண இளைஞர் சேவை அதிகாரி எஸ்.சபேசன் ஆகியோர் உட்பட யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் இளைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7-51)



வடமராட்சி நெல்லியடியில் மாகாணசபை நிதி ஒதுக்கீட்டில் பேருந்து நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. வடமாகாண சபையின் 38 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடத்திற்கான அடிக்கல்லினை வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் நாட்டி வைத்தார். இக்கட்டட வேலைகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# கோப்பாய் கோட்ட பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்று வலுவுடையோர் தினத்தை முன்னிட்டு கோப்பாய் கோட்ட பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரங்களை கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா அறிவித்துள்ளார்.

இதற்கமைய முதல் மூன்று இடங்களை பெற்றுக்கொண்ட மாணவர்கள் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் கீழ்ப்பிரிவில் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் வி.தேனுஜா (யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி,இரண்டாம்இடம் ப.கம்ஷா(யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), மூன்றாம் இடம் ர.லதுர்சன் (யா/ அச்சுவேலி ஆரம்ப பாடசாலை), கவிதைப்போட்டியில் முதலாம் இடம் இ.சுருதிகா(யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்) , இரண்டாம் இடம் சு.தீபிகா (யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர்கல்லூரி), மூன்றாம் இடம் சி.சிவரஜி(யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்) , பேச்சுப்போட்டியில் முதலாம் இடம் டி.சேயோன் (யா/அச்சுவேலி ஆரம்பபாடசாலை), இரண்டாம் இடம் த.திவாகரன் (யா/ ...ாய் நாவலர் வித்தி), மூன்றாம் இடம் ப.விஸ்ணுயன் (யா/ நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), ஆகியோரும் மத் திய பிரிவில் கட்டுரைப்போட்டியில் முதலாம் இடம் ...மாதுரிகா (யா/ உரும்பிராய் ... கல்லூரி), இரண்டாம் இடம் அ.சகிதா(யா/புத்தூர் சோம ஸ்கந்தா கல்லூரி), மூன்றாம் இடம் இ.டனுசா (யா/கோப்பாய் மகா வித்தி யாலயம்), கவிதைப் போட்டியில் முத லாம் இடம் ர.அஜிதா(யா/ஊரெழு கணேசா வித்தியாசாலை), இரண் டாம் இடம் எஸ்.கே கதிஜா(யா/புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி), மூன்றாம் இடம் கௌ.சஜீவன் (யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் க.சுஜீபா(யா/வாதரவத்தை விக்னேஸ்வரவித்தியாலயம்), இரண்டாம் இடம் டோ.றொசானி(யா/உரு ம்பிராய் இந்துக்கல்லூரி), மூன்றாம் இடம் ந.வேனுஜா (யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்), ஆகியோரும் மேற்பிரிவில் கட்டுரைப்போட்டியில் முதலாம் இடம் ஸ்ரீ.சியானி(யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), இரண்டாம் இடம் வே.ஐந்துஜா (யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் ர.பிரின்ஸ்சலா (யா/ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), கவிதைப் போட்டியில் முதலாம் இடம் ர.முகிர்த்தனா (யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் த.சயனுகா (யா/நீர்வேலிஅத்தியார் இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம் பா. வானுஜா (யா/கோப்பாய் கிறிஸ் தவ கல்லூரி), பேச்சுப்போட்டியில் முதலாம் இடம் கு.தீபிகா(யா/கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி), இரண்டாம் இடம் க.திவ்யா (யா/புத்தூர் சோமஸ்கந்தா கல் லூரி), மூன்றாம் இடம் அ.அனற் பானுஷா (யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு வெற்றியீட்டியுள்ளனர். (இ-7-134)

# கொடிகாமம்-நெல்லியடி வரையிலான வீதி புனரமைக்கும் பணி ஆரம்பிப்பு

ஜனாதிபதிக்கு கையளித்த மகஜருக்கு அமைய கொடிகாமம் நெல்லியடி வரையிலான வீதியின் புனரமைப்பு பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்குக்கு அண்மையில் 3 நாள் விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார்.

இதன்போது கடந்த 13 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஜனாதிபதியினால் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் நெல்லியடி வர்த்தக சங்கத்தின் உப தலைவர் எஸ்.அகிலதாஸ் மேற்குறித்த வீதியினை புனரமைத்துத்தருமாறு கோரி மகஜர் ஒன்றை நேரடியாக ஜனாதிபதியிடம் கையளித்தார்.

அம்மகஜரில் கடந்த 30 வருடங்களாக புனரமைக்கப்படாத இவ் வீதியூடாக தினமும் பயணிக்கும் மக்கள் மிகுந்த சிரமத்தினை எதிர் நோக்குகின்றனர்.அத்துடன் கொழும்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான புகையிரத சேவை தற்போது ஆரம்பித்துள்ளது.

ஆனால் நாம் தினமும் பயணிக்கும் குறித்த வீதி புனரமைக்கப்படாது இருப்பது எமக்கு கவலையைக் கொடுக்கின்றது.

இது தொடர்பாக பொது மக்களால் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கமைய அம்மகஜர் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு வீதி திருத்துவதற்கான நிதி வீதி அதிகார சபைக்கு கிடைத்தமைக்கு அமைய தற்போது வீதிப் புனரமைப்பு பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி வர்த்தக சங்க உப தலைவர் அகிலதாஸ் தெரிவித்துள்ளார். (இ-7-60)

# 90 ஆவது சர்வதேச சிக்கன தினம்

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்குகூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் 90ஆவது சர்வதேச சிக்கன தினம் நாளை வெள்ளிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் டி.ஏ.கிரிவந்தெனியா கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான உபுல் சாந்த அல்விஸ்,யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்டபேராசிரியர் சி.க. சிற்றம்பலம் மற்றும் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான திருமதி. மதுமதி வசந்தகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களின் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், இலங்கை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,சணச அபிவிருத்தி வங்கி வடக்கு கிழக்கு பிராந்திய முகாமையாளர் மற்றும் வட மாகாண சணச அபிவிருத்தி வங்கி, காப்புறுதி நிறுவன முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர் .

இதன் போது வரவேற்புரையினை இலங்கை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன முகாமையாளர் ரவீந்திர லியன்ன ஆராய்ச்சி வழங்குவதுடன் தலைமையுரையினை யாழ். மாவட்ட சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதனும், சிக்கன தின பேருரையினை இலங்கை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனியவும் விசேட உரையினை யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறை தலைவர் கு.இரட்ணம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இதே வேளை சிறப்புரைகளை பி.பி. புண்ணிய தாஸா, தி.சுந்தரலிங்கம்,உதுமா லெப்பை, சேனாதிராசா, சி.கணபதிப்பிள்ளை ஆகியோரும் வழங்குவார்கள்.

இதன்போது முற்பகல் 9 மணிக்கு யாழ். முனியப்பர் கோவில் முன்றலில் இருந்துவிருந்தினர்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு அழைத்து வரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to 30.11.2014 from suitably qualified persons for the following posts.

## 01-BURSAR

### QUALIFICATIONS:

1. (a). Should possess a Membership of the Institute of Chartered Accountants of SriLanka or its equivalent.

**AND**

(b). Should possess at least six (6) years of experience in Accounting and/or Auditing in an executive capacity after acquiring the qualifications at 1(a) above.

**OR**

2.A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/ Deputy Internal Auditor in the University System who possesses three (03) years of satisfactory service in that post and confirm in the post with qualification at 1(a) above. At least one (01) year out of the above, (03) years of experience should be after acquiring the qualification at 1(a) above.

**OR**

3. A holder of the post of Senior Assistant Accountant/ Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University system who is confirmed in that post and possess ten (10) years of experience in accounting and/or auditing in an executive capacity and at least eight (08) years of satisfactory service in the post of Senior Assistant Accountant/ Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University system with qualification as at 1(a) above. Three (03) years of such experience should be after acquiring the qualification at 1(a) above.

**OR**

4. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University System who is confirmed in that post with Master's Degree in Accountancy/ Finance/ Management * from a recognized University/HEI and possesses the intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ICASL) or its equivalent with not less than twelve (12) years of experience in accounting and/or auditing in an executive capacity after successfully completion of the above Intermediate qualification. At least ten (10) years of such experience should be in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor or above in the University system.

**OR**

5. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University System who possesses three (03) years of satisfactory service in that post and confirmed in the post with a Degree from a recognized University/HEI and the Intermediate qualification of the institute of Charted Accountants of Sri Lanka (ICASL) or its equivalent/ Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor, with not less than fourteen (14) years of experience in Accounting and/or Auditing in an executive capacity after obtaining the above Intermediate Qualification/HNDA. At least five (05) years of such experience should be at the level of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor and/or Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the Grade of U-EX2(II) in the University system.

**OR**

6.A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/ Deputy Internal Auditor in the University system who possesses a Degree from a recognized University/HEI or Intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ICASL) or its equivalent or Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor, with not less than eighteen (18) years of experience in Accounting or Auditing in the University system out of which at least three (03) years should be in the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University system and confirmed in that post.

NOTE: 'Accounting and/or Auditing' experience means, experience gained in an executive capacity in Accounting and/or Auditing in a State or Reputed Private Sector Organization.

*Term 'Management' means a Degree in Management/ Public Administration/Business Administration with major component in Accounting & Finance.

**Salary Scale:** U-EX 3(II) Rs.47,845 -7X1,050;11X1,310- 69,605/- p.m.

**Selection :** By Structured Interview

**Sabbatical Leave entitlement:** The holder of the above post will be eligible for Sabbatical Leave as per the regulation of the University Grants Commission.

## 02-WORKS ENGINEER (CIVIL)

### GRADE II QUALIFICATION

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers.

**AND**

(B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of Buildings, water supplies, drainage, road and electrical installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour.

**Selection:** By Structured Interview

**Salary Scale:** U- EX2 (II) Rs.33,745-8X645; 8X790-45,225/- p.m

**AGE:** Not more than 45 years. Age limit is not be applicable for applicants in the Government Departments, State Corporations and Statutory Bodies.

### STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on **specified forms** issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non-Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Stamped envelope of 23X10 c.m in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please annexed copies of relevant documents)**. The envelope containing the dully filled application form must bear" **the name of the post applied for**" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar on or before 30.11.2014.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

(சி-8908)

**REGISTRAR, University of Jaffna, 28.10.2014.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தூதரகத்திற்கு எதிராக லெபனானில் நாளை போராட்டம்

லெபனானில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுக்க ஆயத்தமாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

லெபனானுக்கான இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

நாளை 31ஆம் திகதி நடைபெறவுள்ள போராட்டத்தில் சுமார் 85 ஆயிரம் இலங்கையர்கள் ஈடுபடவுள்ளனர்.

இவ்வாறு போராட்டம் நடத்தப்படவுள்ளதாக லெபனானின் இலங்கையர் சங்க ஒன்றியம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

அதில் லெபனான் வாழ் இலங்கையர்களின் தேவைகளை அந்நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் நிறைவேற்றுவதில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தூதரகத்தில் கடமையாற்றி வரும் பதில் அமைச்சு ஆலோசகர் உரிய முறையில் கடமையாற்றுவதில்லை எனவும் அவரை மீள அழைத்துக் கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதில் அமைச்சு ஆலோசகர் முன்னாள் தூதுவரின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கட்டணமின்றி தற்காலிக கடவுச் சீட்டை ஒரே நாளில் வழங்க முடியும் என்ற போதிலும், அதற்காக 175 அமெரிக்க டொலர் அறவீடு செய்வதுடன் ஒரு மாதம் கழித்தே தற்காலிக கடவுச்சீட்டு வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

லெபனானில் பிறந்த இலங்கைக் குழந்தைகளுக்கு விசா வழங்காது அவர்களையும் அவர்களது தாய்மாரையும் நாடு கடத்தும் நடவடிக்கைகளுக்கு தூதரகமும் உடந்தையாக செயற்பட்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்து லெபனான் வாழ் இலங்கையர்களின் நலனை உறுதி செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது. (இ-5)

# குடிநீரில் மனித மலம்

## 2 வகை போத்தல்களுக்குத் தடை

நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும், போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீரில் மனித மலம் கலந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டமையால், இரு வகையான நாமங்களை கொண்ட குடிநீர் போத்தல்களுக்கு, நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

மாளிகாகந்த மேலதிக நீதவான் ரஷந்த கொடவெலவே, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு தடைவிதித்துள்ளார்.

கிரிஸ்டல் (cristal) மற்றும் கே சொய்ஸ் (K Choice) ஆகிய வர்த்தக நாமங்களை கொண்ட குடிநீர் போத்தல்களுக்கே இவ்வாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அந்த நாமங்களை கொண்ட போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீரில், மனித மலத்திலுள்ள பற்றீரியா கலந்துள்ளமை வைத்திய பரிசோதனை நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவற்றை தடைசெய்யுமாறு நுகர்வோர் அதிகார சபை நீதிமன்றத்தில் கேட்டிருந்தது.

இதனையடுத்தே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் அறிவித்தது.

இதேவேளை, இந்த குடிநீர் போத்தல்களை தயாரிக்கும் நிறுவனத்தின் முகாமையாளர்கள் மற்றும் அந்த போத்தல்களை விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்திய பல்பொருள் அங்காடி முகாமையாளர் ஆகியோரை எதிர்வரும் 11ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# கௌரவிப்பும் மலர் வெளியீட்டு விழாவும்

(கொழும்பு)

சட்டத்துறை வாழ்வில் பொன் விழாகாணும் சமூக சேவையாளர் க.மு.தர்மராஜாவை கௌரவிக்கும் நிகழ்வும் மலர் வெளியீடும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணி கனக் ஈஸ்வரன் மற்றும் கௌரவ விருந்தினராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது வரவேற்புரையினை சட்டத்தரணி சோ. தேவராஜா வழங்குவதுடன் வாழ்த்துரையினை பேராசிரியர் சோ. சந்திரசேகரம், கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் ஆ. இரகுபதி பால சிறிதரன் மற்றும் தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 120 | 120 |
| தக்காளி | 160 | 180 | 170 | 160 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 30 | 50 |
| கோவா | 120 | 100 | 100 | 80 |
| கரட் | 160 | 100 | 250 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 60 |
| புடோல் | 80 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 400 | 280 | 240 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 60 | 60 |
| பயற்றங்காய் | 400 | 260 | 200 | 200 |
| லீக்ஸ் | 200 | 150 | 150 | 160 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 140 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 200 | 280 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 | 30 |
| தேசிக்காய் | 140 | 160 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 40 | 35-45 |
| இராசவள்ளி | 160 | 130 | 150 | 160 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 178

மயூரன் சுவிற்ரோனி




ரத்தினசபாபதி பாலராஜா



மதீசன் கணேஷ்

மூன்று பேருக்கு 25 வருட சிறைத்தண்டனை தரப்பட்டது. ஆனால் தன்னோடு வைத்துக் கொள்ள ஏதாவது அவர்கள் கேட்கலாம்.

முதல் ஆள் "எனக்கு 500 புத்தகங்கள் வேண்டும்" என்றான். இரண்டாம் ஆள், "எனக்கு சிறையில் உடற்பயிற்சி செய்ய உபகரணங்கள் வேண்டும்" என்றான். மூன்றாம் ஆள், "எனக்கு ஒரு லட்சம் சிகரெட்டுகள் வேண்டும்" என்றான்.

25 வருடம் கழித்து மூன்று பேரும் விடுதலை செய்யப்பட்டனர். முதல் ஆள், "நான் நிறைய தெரிந்து கொண்டேன் ஒரு லைப்ரரி அமைப்பேன்" இரண்டாம் ஆள், "நான் உடலை வலுவாக்கினேன் ஜிம் வைப்பேன்" மூன்றாம் ஆள், "நான் சிகரெட் பிடிப்பதை விட்டு விட்டேன்" என்றான். எல்லோருக்கும் ஆச்சரியம். போகும் போது லட்சம் சிகரெட் கேட்டவன் எப்படி திருந்தினான் என்று.


அவன் சொன்னான்,

"தீப்பெட்டி கேக்க மறந்துட்டேனப்பா"

கரோலின் கெனி




சஜன் வினோ





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியா, ராகுல் மீது ஏன்? ஒரு நடவடிக்கையும் இல்லை

## சுவாமி கேள்வி



வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப்பணத்தை பதுக்கி வைத்திருக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, துணை தலைவர் ராகுல் காந்தி மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பா.ஜ.க. தலைவர்சுப்பிரமணியன்சுவாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப்பணம் பதுக்கி வைத்திருக்கும் 3 தொழில் அதிபர்களின் பெயரை மத்திய அரசு வெளியிட்டது.

ஆனால் அதில இருவர் தங்களுக்கு வெளிநாட்டு வங்கிகளில் கணக்கே இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து பா.ஜ.க. தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கூறுகையில்,

ராகுல் காந்தியும், சோனியா காந்தியும் வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப்பணத்தை பதுக்கி வைத்துள்ளனர் என நான் மத்திய நிதி அமைச்சகத்திற்கும், ஆணையத்திற்கும் கடிதம் எழுதினேன்.

ஆனால் அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் காங்கிரஸைச் சேர்ந்த முன் னாள் மத்திய அமைச்சர்கள் 8 பேரின் பெயர்களாவது கறுப்புப்பணம் பதுக்கியிருப்பவர்களின் பட்டியலில் உள்ளதே என்றார்.

இது குறித்து அவர் டுவிட்டரில் கூறியிருப்பதாவது,

வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப்பணத்தை வைத்திருக்கும் சுமார் 100 பேருக்கு பொது மன்னிப்பு அளித்துள்ளது ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு. அந்த பட்டியலையாவது வெளியிடுங்களேன் என்று தெரிவித்துள்ளார். (இ-5)

பாரதச் செய்தி

# பதுக்கல் பணம் பட்டியல் மன்றில்

## பலரின் எதிர்காலம் கேள்விக்குறி

வெளிநாடுகளில் கறுப்பு பணத்தை பதுக்கியுள்ளவர்களின் முழு பட்டியலை நேற்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்தது.

இந்தப் பட்டியலில் 627 பேரின்பெயர்இடம்பெற்றுள்ளது.

இந்தப் பட்டியலை மத்திய அரசின் தலைமை சட்டத்தரணி முகுல் ரோஹத்கி தாக்கல் செய்தார். கறுப்பு பணம் பதுக்கிய 627 பேர் விபரங்கள் கொண்ட பட்டியல், சீலிடப்பட்ட உறையில் வைத்து தாக்கல் செய்யப்பட்டது.

அந்த உறையை பிரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது. மத்திய அரசு தாக்கல் செய்த பட்டியல், வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்பு பணத்தை மீட்பது குறித்து விசாரணை நடத்தி வரும் சிறப்பு புல னாய்வுக் குழு முன்னர் சமர்பபிக்கப்படும் என உச்ச நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

மேலும், சிறப்பு புலனாய்வுக் குழு தலைவரோ அல்லது துணை தலைவரோ மட்டுமே அந்த பட்டியல் அடங்கிய உறையை பிரிக்க முடியும என வும் தெரிவித்துள்ளது.

கறுப்பு பணம் விசாரணை நிலவரம் குறித்த அறிக்கையை நவம்பர் மாத இறுதிக்குள் தாக்கல் செய்யுமாறு சிறப்பு புலனாய்வு குழுவுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கறுப்புப்பண விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதையும் மத்திய அரசே தீர்மானிக்கும் என உச்ச நதிமன்றம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல். தத்து தலைமையிலான அமர்வு வெளி நாடுகளில் கறுப்பு பணத்தை பதுக்கியுள்ளவர்களின் முழு பட்டியலை நேற்று தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

இது குறித்து மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி கூறும்போது, வெளிநாட்டில் கறுப்புப் பணம் வைத்திருக்கும் அனைவரது விபரங்களும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். கடந்த ஜுன் மாதம் 27 ஆம் திகதி, சிறப்பு விசாரணைக் குழுவினரிடம் கறுப்புப் பண நபர்கள் பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரங்களை உச்ச நீதிமன்றத்திடம் பகிரப்படும் என்றார்.

இந்நிலையில், வெளிநாடுகளில் கறுப்பு பணத்தை பதுக்கியுள்ளவர்களின் முழு பட்டியல் உச்ச நீதிமன்றத்தில் நேற்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது.(இ-5)

## குளத்தில் மூழ்கி 6 குழந்தைகள் பலி!

பிஹாரின் சஹர்சா மாவட்டத்தில் 6 குழந்தைகள் நேற்று முன்தினம் குளத்தில் மூழ்கி உயிரிழந்தனர். மேலும் 2குழந்தைகளை காணவில்லை.

இம்மாநிலத்தில் 4 நாட்கள் 'சத்' பண்டிகை கடந்த திங்கடகிழமை தொடங்கியது. இந்தப்பண்டிகையின்போது, ஆறு, குளம் உள்ளிட்ட நீர் நிலைகளின கரைகளை சுத்தம் செய்வது மக்களின் வழக்கம்.

இதன்படி பாரதிநகர் என்ற இடத்தில் குளக்கரையை சுத்தம் செய்துகொண்டிருந்த போது, இத்துயர சம்பவம் நேரிட்டது. இதில் உயிரிழந்த குழந்தைகள் அனைவரும் 10 முதல் 13 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பங்கஜ் சின்ஹா தெரிவித்தார். (இ-5)

## விஜய், முருகதாஸ் மீது அவதூறு வழக்கு தொடுப்பு

கத்தி திரைப்பட நாயகன் வஜய், இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் மற்றும் படத்தைத் தயாரித்த லைக்கா நிறுவனம் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கத்தி திரைப்படத்தின் இறுதிக்கட்ட காட்சிகளின் போது 2ஜி அலைக்கற்றை ஊழல் பற்றிய வசனம் இடம்பெற்றிருந்தது. 2ஜி வழக்கு நீதிமன்ற விசாரணையில்இருக்கும்போது ஊழல் நடந்ததாக வசனம் இடம்பெற்றது பற்றி அவதூறு வழக்கு நேற்று தொடரப்பட்டுள்ளது. (இ-5)

# ஹீரோவாக நினைக்கும் கருணாநிதி இறுதியில் ஸீரோவாகப் போகின்றார்

## தமிழக முதல்வர் பன்னீர் பதில்

**பதவி நிலைத்திடவாவது பதறி எழுவீர்!** என்ற தலைப்பில் தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிக்கை வெளியிட்டுள்ளார். மக்களை ஏமாற றியாவது பதவியை அடைந்திட இயலுமா என்ற பதற்றத்தில எழுதியுள்ள அறிக்கையாகவே அமைந்துள்ளது என்று தமிழுக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

கருணாநிதிக்கு பதிலளிக்கும் வகையில் ஓ.பன் னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பதறிய காரியம் சிதறும்" என்பது பழமொழி. இந்த பழமொழிக் கேற்பதான் கருணாநிதியின் அறிக்கையும் உள்ளது. தமிழுக அரசு வடகிழக்கு பருவ மழை தொடங்குவதற்கு முன் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், வடகிழக்கு பருவமழை தொடங்கிய பின் எடுத்த மீட்பு நடவடிக்கைகள், நிவாரண நடவடிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை பற்றி அறிந்து கொள்ளாமல், கற்பனை குதிரையை ஓடவிட்டு, கட்டுக் கதைகளும், புளுகு மூட்டைகளும் அடங்கிய ஒரு வெறறு அறிக்கையை அரசியல் ஆதாயம்தேட வேண்டும்என்ற அற்ப எண்ணத்தில், பதற்றத்தில் வெளியிட்டிருக்கிறார்.

கருணாநிதியின் அறிக்கை முழுவதும் கற்பனைக் கதையே தவிர, அதில் எள் ளளவும் உண்மை இல்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கருணாநிதி தனது அறிக்கையில், அமைச்சர்களோ, அதிகாரிகளோ வெள்ளப் பகுதிகளை பார்வையிடவில்லை என்று கூறியிருக்கிறார். மழையினால் பாதிக்கப்பட்டுள்ள 20 மாவட்டங்களுக்கு உயர் அதிகாரிகள் அனுப்பப் பட்டு, அவர்கள் அங்குள்ள வெள்ளப் பகுதிகளை பார்வையிட்டு, அங்கு நடைபெற்ற மீட்பு, பாதுகாப்பு மற்றும் நிவாரணப் பணிகளையும் உன்னிப்பாக கவனித்தனர்.

அமைச்சர்கள்மற்றும்உயர் அதிகாரிகள், சென்னை மாநகர முதல்வா சைதை துரைசாமி ஆகியோர் சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் வெள்ளப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி அவரகளுக்குத் தேவையான உதவிகளை செய்துள்ளனர் என்று தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சகாயம் நியமனத்தை எதிர்த்த மனு தள்ளுபடி

குவாரிகள் முறைகேடு தொடர்பாக ஆய்வு நடத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் நியமிக்கப்பட்டதை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேலும் வழக்கு செலவாக 10 ஆயி ரம் ரூபா செலுத்தவும் அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தமிழகத்தில் செயற்படும் சட்டவிரோத குவாரிகள் தொடர்பாக சமூக ஆர்வலர் டிராஃபிக் ராமசாமி, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல்செய்திருந்தார். அதில் கூறியிருந்ததாவது,

அரசு அனுமதித்த அளவுக்கும் அதிகமாக மாநிலம் முழுவதும் குவாரி உரிமையாளர்கள் பலர் சட்டவிரோதமான முறையில் கனிம வளங்களை தோண்டி எடுக்கின்றனர். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்காக வழங்கப்பட்ட பூமி தான நிலங்கள், அரசு புறம்போக்கு நிலங்கள், ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட தனியார் பட்டா நிலங்கள் என பல இடங்களில் சட்ட விரோதமான முறையில் கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன.

தமிழகத்தில் நடக்கும் சட்டவிரோத கனிம குவாரிகள மீது நடவடிக்கை எடுக்குமாறு பல ஆண்டுகளாக கோரி ககை வடுத்து வருகிறேன். எனினும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதற்கிடையே, மதுரை மாவட்ட ஆட்சியராக ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் பணியாற்றியபோது, அந்த மாவட்டத்தில் உள்ள கிரானைட் குவாரிகள் பற்றி ஆய்வு செய்தார். அந்த ஒரு மாவட்டத்தில் செய றபடும் குவாரிகளால் மட்டும் அரசுக்கு 16 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் அறிக்கை அனுப்பியிருந்தார்.

மேலும் குவாரிகள் பற்றி ஆய்வு செய்ய ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் கேட்கும் வசதிகள் அனைத்தையும் தமிழக அரசு 4 நாட்களுக்குள் செயது தர வேண்டும். தனது பணிக்கு ஏதேனும் தடங்கல் இருப்பதாக கருதினாலோ அரசிடமிருந்து உரிய உதவி கிடைக்காவிட்டாலோ உயர் நீதிமன்றத்தை சகாயம் நாடலாம் என்று நீதிபதிகள் தங்கள் உத்தரவில கூறியுள்ளனர். (இ-5)

இவர்களுக்கு மணமகள் தேவை
கல்யாண மாலை
இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L/ (பிரான்ஸ் PR)
தொ.இ: B/3728

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 28
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பொறியியலாளர் (கனடா)
தொ.இ: B/3729

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 38 3/4 செவ் 12 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/3731

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 4 சூரிசெவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்
தொ.இ: B/3735

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 15 1/4 சூரிசெவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA/ தனியார் வேலை
தொ.இ: G/3738

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 53 செவ் 4 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்
தொ.இ: G/3739

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 56 செவ் 2 இல்
உயரம்: 147cm
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/3740


பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/லிகிதர்
தொ.இ: G/3742

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தோல்விகளே வெற்றிக்கான படிக்கட்டுக்கள்"

## கணிதவியல்மேதை இராமானுஜன்



இராமானுஜன்



திரு.பி.முத்துலிங்கம்
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்

பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றின் மதிப்பீட்டு முறைகள் மாணவர்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதுடன் அவ்வாறு பாதிக்கப்பட்டவரின் எதிர்காலத் திறமைகளில் அது எவ்விதம் ஆக்கபூர்வமான அல்லது எதிர்மாறான ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை பல்வேறு அனுபவஸ்தர்களது வாழ்க்கையிலிருந்து கண்டு கொள்ளக்கூடியதாயுள்ளது.

இப்படியான தோல்விகள் ஏற்பட்டிருந்தாலுங்கூட இவ்வாறான தோல்விகளே வெற்றிக்கான படிக்கட்டுக்கள் என்ற மனநிலை ஒவ்வொரு மாணவனுக்கும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

கணிதவியல் மேதை இராமானுஜன் போன்ற கண்டறியப்பட்ட ஒரு சிலரது மேதா விசுவாசத்தின் மீது பரீட்சை மைய எதிர்மறைச் சிந்தனைகள் எவ்வாறு கரும்புள்ளி குத்துகின்றன என்பதையும் பாடங்களாக நாம் இங்கு கற்கின்றோம்.

கணிதமேதை சீனிவாச இராமானுஜன் இடைநிலைத்தேர்வில் கணக்குப் பாடத்தில் தோற்றுப் போனாரா? அவர் வாங்கிய மதிப்பெண் எவ்வளவு?

தொடக்கத்திலிருந்தே இதைப்பற்றிப் பல குழப்பங்கள் நிலவி வந்திருக்கின்றன.

1919 இல் மார்ச் மாதத்தில் இங்கிலாந்திலிருந்து இராமானுஜன் திரும்பிய போது மெட்ராஸ் ரைம்ஸ் நாளேடு 6 ஏப்ரல் 1919 இல் வெளியிட்ட கட்டுரையில் டிசெம்பர் 1907 இல் கலை முதற் தேர்வில் தனிப் பரீட்சார்த் தியாக அமர்ந்து எல்லாப் பாடங்களிலும் தோற்ற பெருமை இவருக்கு உண்டு.

இதற்குக் காரணம் அவருடைய உடல் நலக் குறைவே என்பதில் ஐயமில்லை என்று எழுதியது. இராமானுஜன் எழுதுநராகப் பணியாற்றிய சென்னைத் துறைமுகக் கழகத்திலுள்ள கோப்புக்களின் அடிப்படையில் எழுதப்பட்டது என்ற குறிப்பும் இக்கட்டுரையில் உள்ளது.

### ஸ்நோ ஏற்படுத்திய குழப்பம்

இராமானுஜனின் புரவலராகவும் கணிதவியல் தோழராகவும் விளங்கிய ஜி.எச். ஹார்டி யின் இளம் நண்பர் சி.பி.ஸ்நோ ஆங்கிலப் பாடத்தில் தோற்றதால் மேதையாக இருந் தாலும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இராமானுஜன் நுழைய முடியவில்லை என்று ஹார்டியின் **ஒரு கணிதவியலாளனின் மன்னிப்பு** என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகின்றார். இராமானுஜன் தோற்றது கணக்கிலா, ஆங்கிலத்திலா என்ற குழப்பத்தோடு பள்ளி இறுதியினையும் இடைநிலைத் தேர்வினையும் ஸ்நோ குழப்பி விடுகிறார்.

இராமானுஜனின் விரிவான வாழ்க்கை வரலாற்றை எழுதிய ராபர்ட் கானிகர் நான்கு முறை இடைநிலைத் தேர்வை எழுதி கணக்கைத் தவிர பிற பாடங்கள்



கல்வித் தரிசனம்

எல்லாவற்றிலும் அவர் தோற்றதாகச் சொல்கிறார்.

இராமானுஜன் அருங்காட்சியகத்தின் அதிகாரபூர்வ வலைத்தளம், தனிப்பரீட்சார்த்தியாக கலை முதல் தேர்வு எழுதிக் கணக்கில் மட்டும் நூறு மதிப்பெண் பெற்று பிற பாடங்களிலெல்லாம் அவர் தோற்றார் என்கிறது.

### தொன்மத்தின் ஊற்றுக்கண்

1967 இல் இராமானுஜனின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய இந்திய நூலகவியலின் தந்தை எனப்படும் எஸ்.ஆர். இரங்கநாதன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் புள்ளி விபரவியல் ஒரு பாடமாக 1922 இல் அறிமுகப் படுத்தப்பட்டபோது பல்கலைக்கழகத்தின் மதிப்பீட்டு முறைகளை ஆராய்ந்திருக்கிறார்.

அப்போது பழைய மாணவர்களின் மதிப்பெண் பட்டியல்கள் அனைத்தையும் பார்வையிட்டிருக்கின்றார்.

இராமானுஜன் கணக்கிலே அதிக மதிப்பெண் களைப் பெற்றார். பிற பாடங்களில் குறைந்த மதிப்பெண் பெற்றதே அவர் தேர்ச்சி பெறாததற்குக் காரணம். இதுதான் உண்மைக்கதை என்கிறார்.

இருப்பினும் இந்தப் பிரச்சினை தீர்ந்த பாடில்லை. கணிதமேதை இராமானுஜன் கணக்கில் தோற்றார் என்றால்தானே ஒரு துன்பியல் நாடகம் போல் அமைந்த மேதையின் வாழ்வின் சிறந்த அங்கமாக அது அமைய முடியும்.

இராமானுஜனின் தோல்வி என்ற தொன்மத்தின் ஊற்றுக்கண் இதுதான். வெள்ளை காலனியாதிக்கம் இந்தியாவின் அறிவாற்றல் மரபைக் குலைத்தது என்ற தேசியக் கருத்தியலும் இந்தத் தொன்மத்துக்கு உரம் சேர்த்தது.

உண்மையில் இராமானுஜன் கணக்கில் தேறினாரா? இல்லையா? அவர் பெற்ற மதிப் பெண் தான் என்ன? இதற்கான விடை மிகத் தற்செயலாகத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 25 ஆண்டுகளுக்கு முன் வரலாற்றுப் பேராசிரியர் ஆ. இரா. வெங்கடாசலபதி என்பவருக்கு கிடைத்தது. அதனை அவர் ஆங்கிலத்தில் எழுதி எக்கனொமிக் அன் பொலிரிக்கல் வீக்லி (Economic and Political Weekly) சஞ்சிகையில் 13 மாசி 1988 இதழில் வெளியிட்டார்.

பெரிதும் கவனிக்கப்படாமல் போன அந்தக் கட்டுரையின் சாரம் தரப்படுகின்றது.

### நியூ இந்தியாவின் கேலி

1917 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் இராமானுஜனுக்கு மதிப்புறு பி.ஏ (B.A)பட்டம் வழங்கியது. அப்போது சுயாட்சிப்போராட்டத்தில் முனைப்பாக இருந்த அன்னி பெசன்ட்டின் நியூ இந்தியா (25ஏப்ரல் 1917) நாளேடு ஆங்கிலேய அரசைக் கேலி செய்து பின்வருமாறு எழுதியது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் எஸ். இராமானுஜனுக்கு பி.ஏ.பட்டம் வழங்கியதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். அவருக்கு உரிய அங்கீகாரம் கிடைத்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தின் கலை முதல் தேர்வில் அவர் தேறியிரா விட்டால்தான் என்ன? அது இராமானுஜனின் குற்றமல்லவே. அந்தப் பழி அவரைச் சேராது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வல்லுநர்கள் தங்களது முதல்கலைத் தேர்வுக்கு அவர் தகுதியுள்ளவர் என்று நினைக்கவில்லை.

இந்தக் கட்டுரை அரசின் கவனத்திற்கு வந்தது. உடனே பல்கலைக்கழகத்திற்கு கடிதம் பறந்தது. அன்றைய பதிவாளர் பிரான்சிஸ் டியூபெரி பதிலளித்தார்.

எஸ்.இராமானுஜன் 1903 இல் மெட்ரிக்குலேஷனில் தேறி நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 1907 இல் முதல் கலைத் தேர்வை தனிப் பரீட்சார்த்தியாக எழுதித்தோல்வியுற்றார்.

**அவருடைய பதிவேடு பின்வருமாறு,**

பிறந்த நாள்: 1888 ஜூன்

**தந்தை பெயர்:** சீனி வாச அய்யங்கார் மிராசு தாரர்

மெட்ரிக்குலேசன் 1903, கும்பகோணம் டவுன் உயர்நிலைப் பள்ளி

1907 இல் முதல் கலைத் தேர்வில் பெற்ற மதிப் பெண்கள் (பதிவு எண் 1198)

| பாடம் | அதிகபட்ச மதிப்பெண் | குறைந்தபட்ச மதிப்பெண் | பெற்ற மதிப்பெண் |
|---|---|---|---|
| ஆங்கிலம் | 200 | 70 | 38 |
| சமஸ்கிருதம் | 100 | 35 | 34 |
| கணிதம் | 150 | 45 | 85 |
| உடலியல் | -- | -- | 00 |
| வரலாறு | -- | -- | 00 |

பெரும்பாலும் உடலியல், வரலாறு ஆகிய பாடங்களை அவர் எழுதியிருக்க மாட்டார் எனலாம். இராமானுஜன் கணக்கில் தோற்கவில்லை. மனித வாழ்க்கைக்கு உண்மைகள் மட்டுமல்ல தொன்மங்களும் வேண்டும்.

இராமானுஜன் கணக்கில் தோற்றார் என்ற தொன்மம் எத்தனை ஆவணங்களைக் கொண்டு அழித்தாலும் தொடர்ந்து தளிர்க்கும் என்று நம்பலாம்.

இந்திய வரலாற்றுப் பேராசிரியர் ஆ.இரா. வெங்கடாசலபதி என்பவரின் ஆய்வுகளிலிருந்து தொகுக்கப்பட்டவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் சமூகத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கம் முயற்சி

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழ் சமூகத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

புலம்பெயர் சமூகத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள பாகிஸ்தானின் முன்னாள் நிதி அமைச்சர் ஒருவருடன் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றது.

புலம் பெயர் சமூகத்திற்கு என்ன விலை கொடுத்தும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க செய்ய முடியுமா? என்று பார்க்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

தங்களது தேவைக்காக எவருடனும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவர்களே இந்த ராஜபக்ஷக்கள். நாடு முழுவதிலும் பல்வேறு வழிகளில் பிரசார நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.



பதாகைகள், சுவரொட்டிகள், காரியாலய அங்குரார்ப்பணம் என பல்வேறு வழிகளில் பிரசாரம் செய்யப்படுகின்றது.

தேசிய பத்திரிகைகளில் அரசாங்க செலவில் ஜனாதிபதியின் பெருமைகளையும் அரசாங்கத்தின் பெருமைகளையும் பிரசாரம் செய்யும் விளம்பரங்கள் மூன்று நான்கு பக்கங்களில் நாள்தோறும் பிரசுரமாகின்றன. அரசாங்க நிறுவனங்களின் செலவில் இந்த பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களை அரசாங்கம் மேற்கொள்கின்றமை தெளிவாகியுள்ளது.

தற்போதைய ஜனாதிபதிக்கு தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்க எந்த வகையிலும் முடியாது. மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவும் ஜனாதிபதிக்கு முடியாது.

அரசாங்கம் தொடர்ந்தும் புலிப் பீதியை காண்பித்து தேர்தலில் வெற்றியீட்ட முயற்சிக்கின்றது. ஈழக் கோரிக்கையை கைவிட்டால் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாது செய்வேன் என்ற ஜனாதிபதியின் தர்க்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். பிரபாகரன் கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறான ஓர் நிலைமையில் ஈழக் கோரிக்கை தொடர்பான வாதம் அர்த்தமற்றது. புலிகளிடமிருந்து நாட்டை பாதுகாக்க எனக்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு ஜனாதிபதி மீளவும் கோர ஆரம்பித்துள்ளார்.

இவ்வாறான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதிக்கு மூன்று தடவை முடியாது என்ற தலைப்பில் மாத்தறை நுபே பிரதேசத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-3)

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்



## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக சிங்கள ஊடகமொன்றுக்கு அமைச்சர் தெரிவித்தார்.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலியுடன் சந்திப்பு நடத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் இந்த ஆரம்ப கட்ட சந்திப்பு நடத்தப்பட்டது.

தேசிய சுதந்திர முன்னணி, லங்கா சமசமாஜ கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போன்ற கட்சிகள் ஏற்கனவே ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய அரசியல் கட்சிகளின் ஆதரவினை திரட்டும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்தவிற்கு ஆதரவினை திரட்டும் நோக்கில் சில விசேட பிரதிநிதிகளை ஆளும் கட்சி நியமித்துள்ளது.

இதன் அடிப்படையில் கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில கட்சிகள் ஏற்கனவே ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக நேரடியாக அறிவித்துள்ளன.

மேலும் சில கட்சிகள் ஆதரவளிப்பது குறித்து இறுதித் தீர்மானம் எதனையும் இதுவரையில் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பாலியல் இலஞ்சம் பெற்றுக்கொண்டமை நிரூபிக்கப்பட்டால் கடுமையான தண்டனை

(கொழும்பு)

கிரிக்கெட் வீராங்கனைகளிடம் பாலியல் இலஞ்சம் பெற்றுக் கொண்டமை தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனைகள் அணியில் இடம்பெற வேண்டுமாயின், அதிகாரிகளுக்கு பாலியல் இலஞ்சம் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுவதாக அண்மையில் பரபரப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது..

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்த விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் வழங்கப்படக் கூடிய உச்ச அளவிலான தண்டனைகளை விதிக்க தயங்கப் போவதில்லை.

விசாரணைக்குழுவில் நிறுவனத்தின் நிறைவேற்று குழுவில் அங்கம் வகிக்கும் ஆண்கள் இடம் பெற்றுள்ள போதிலும், நியாயமான விசாரணைகளை எதிர்பார்க்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அணியில் உள்ளடக்கப்படுவதற்கு வீராங்கனைகளிடம் அதிகாரிகள் குறிப்பாக தெரிவுக்குழு அதிகாரிகள் பாலியல் ரீதியான இலஞ்சத்தை வீராங்கனைகளிடமிருந்து எதிர்பார்த்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை முற்று முழுதாக நிராகரிக்கின்றேன் என மகளிர் அணி தெரிவுக்குழுவின் தலைவர் ஜயந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் மேலதிக தகவல்களை வெளியிட முடியாது என அவர் சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பாராட்டுக்குப் பலன் உண்டு

ஒருத்தன் ஏதாவது வேலை கிடைத்தால் நல்லது என்று அலைந்துகொண்டிருந்தான். ஓர் இடத்தில் அவனுக்கு ஒரு வேலையும் கிடைத்தது. கொஞ்சக் காலம் ஆயிற்று " இப்போ வேலையை விட்டால் நல்லது" என்று புலம்பிக்கொண்டிருக்கிறான்.

"என்ன காரணம்?" என விசாரித்தேன். "என்னாங்க பண்றது... எனக்கு மேலே இருக்கிறவன் பெரிய கோபக்காரனாய் இருக்கிறான். எதுக்கெடுத்தாலும் கோப்படறான். அவனை அனுசரித்து போறது ரொம்ப கஷ்டமா இருக்கு. அதுதான்... இந்த வேலையை விட்டிட்டு வேற வேலை தேடலாம் என்று பார்க்கிறேன் " என்றான்.

இப்படி அவன் சொன்னதும் நான் எப்போதோ படித்த ஒரு செய்தி எனக்கு நினைவுக்கு வந்தது. அதை அவனிடம் சொன்னேன். அது என்னவென்றால்...

நியூயோர்க் நகரத்தில் ஒரு மனநல மருத்துவ நிபுணர். ஒரு நாள் அவரைத் தேடி ஒரு பெண் வந்தாள். "டாக்டர்... உங்ககிட்ட ஒரு முக்கியமான ஆலோசனை கேட்கலாம்னு வந்திருக்கேன்" என்றாள்.

"என்னம்மா விடயம்?"என்று விசாரித்தார் அவர். அவள் சொன்னாள்...

"டாக்டர் நான் ஒரு தொழிற்சாலையிலே தலைமை அதிகாரியின் சுருக்கெழுத்தாளரா வேலை பார்க்கிறேன். அந்த அதிகாரி ஒரு சிடுமூஞ்சி. அவர் மூஞ்சியும் அவரும் குரங்கு மாதிரி. அவரைப் பாக்கிறதுக்கே எனக்கு பிடிக்கல் எதுக்கெடுத்தாலும் கோபப் படுகிறார். அவரது கோப தாபங்கள் என்னால் சமாளிக்க முடியவில்லை. மனசுக்கு ரொம்ப சங்கடமாயிருக்கு. இரவு பூராகவும் சரியாக தூங்கவும் முடியலை. அந்த அளவுக்கு வேதனையா இருக்கு. அலுவலகத்திலே அவன் கூட வேலை பார்க்கிற ஒவ்வொரு வினாடியும் எனக்கு ஒரு யுகம் போல இருக்கு. ஒரு நாள் முழுவதும் அவனோடு இருக்கிறது பெரும்பாடாய் இருக்கு. அதனால இந்த வேலையை விட்டிடலாம்னு பார்க்கிறேன். அதுக்கு முன்னாடி உங்களோட ஆலோசனை கேட்கலாமேன்னு வந்திருக்கேன். என்னசொல்றீங்க? "

அந்த நிபுணர் அந்த பெண் சொல்வதையெல்லாம் பொறுமையாகக் கவனமாக கேட்டுக் கொண்டார். அதன்பிறகு சொன்னார்.

"அம்மா நான் ஒரு யோசனை சொல்றேன். அது பிரகாரம் மூணு மாசம் நடந்து கொள்... அதுக்கப்புறம் என்னிடம் வா... அப்புறமா இராஜினாமா பண்ணலாமா வேண்டாம் என்கிறதைப் பற்றி யோசிப்போம். "

"என்ன செய்யணும், சொல்லுங்க...? "

" இதோ பாரும்மா... சிடுமூஞ்சியிடம் சில நல்லகுணங்கள் பதுங்கியிருக்கு அதையெல்லாம் கண்டுபிடிச்சு வாயாற பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டுன்னு வைச்சுக்கோ. இப்படியே தொடர்ந்து செய்... பார்க்கலாம்! "

" சரி " என்று சொல்லிவிட்டு அந்தப்பெண் புறப்பட்டாள்.

மறுநாள் வழக்கம் போல் அலுவலகம் போனாள். சுருக்கெழுத்துக்காக அந்த அதிகாரியின் அறைக்கு போனாள். அந்த அதிகாரி போட்டிருந்த சட்டை அழகாக இருந்தது.

"சார் ...உங்க சட்டை ரொம்ப நல்லாயிருக்கு." அடுத்த நாள் அவரது ஆங்கில எழுத்து நடையைப் பாராட்டினாள். இப்படியாக தினமும் ஒரு பாராட்டு. இப்படி பாராட்டு ஏற ஏற சிடுமூஞ்சித்தனம் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்தது.

மூன்று மாதங்கள் கழித்து அந்த பெண் மறுபடி மனநல மருத்துவரிடம் வந்தாள்.

"என்னம்மா ... வேலையை இராஜினாமா பண்ணலாமா?"

"அது எப்படிங்க முடியும்?"

" ஏன் ?.."

" நான் அவரை கல்யாணம் பண்ணிக்க போறேன். இப்ப அவர் என் காதலர். இதோ போட்டிருக்கேனே வைர மோதிரம்... இது அவர் எனக்கு பரிசாக கொடுத்தது." இதை வெட்கத்தோடு சொல்லி முடித்தாள் அந்த பெண்.

அவனை பற்றி மூன்று மாதத்திற்கு முன் அவள் சொன்ன வார்த்தைகளை எல்லாம் இப்போது நினைத்து பார்த்தேன். எனக்கே ஆச்சரியமாக போயிட்டுது.

அப்படிப்பட்ட சிடுமூஞ்சிக்கு வந்த வாழ்வை பாருங்கள் சில நாட்களில் அவர்களில் திருமணமும் கோலாகலமாய் நடந்து முடிந்தது.

இது தான் நான் செய்தித்தாளில் படித்த ஒரு உண்மை நிகழ்ச்சி.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் என்னிடம் வந்து குறைப்பட்டு கொண்டிருந்தவனிடம் இந்த நிகழ்ச்சியை சொன்னேன்.

அவன் கொஞ்சம் யோசனை செய்தான்.

"சார் நானும் என்னுடைய முடிவை மாத்திக்க போறேன் .இதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போறேன். என்க்கு மேலே இருக்கிறானே ஒரு சிடுமூஞ்சி ... அவனைக் கூடிய சீக்கிரம் மாத்திப்புடலாங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு...உங்க யோசனைக்கு மிக்க நன்றி ஒரு மூன்று மாதம் கழித்து நானும் ஒரு கல்யாணப் பத்திரிகையோடு உங்களை வந்து சந்திக்கிறேன்." என்று சொல்லிவிட்டு புறப்பட்டான்.


" அது எப்படி?" என்றேன் ஒன்றும் புரியாமல்!

" அந்த சிடுமூஞ்சிக்கு ஒரு பெண்ணு இருக்கு சார் ...அது என் கூடப் படிச்சது. நான் அவன் கிட்ட வேலைக்கு சேர்ந்தது அதுக்காக தான் சார்." என்றான் அசடு வழிய...!


*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முக்காட்டு அழகி!



**...வே**று பாதையில் போய், பாட்டியை விழுங்கிவிட்டு, இந்தச் சிறுமி வரும்வரைக் காத்திருந்து, இவளையும் லபக் செய்து விட வேண்டும்' என்று ஓநாய தீர்மானித்தது.

நான்கு கால் பாய்ச்சலில் குறுக்கு வழியில் போன ஓநாய், பாட்டியின் வீட்டை அடைந்ததும் கதவைத் தட்டியது.

யாரது? பாட்டி உள்ளிருந்து கேட்டாள்.

நான்தான் உங்கள் பேத்தி சிவப்பு முக்காட்டு அழகி வந்திருக்கேன்.

உங்களுக்காக கேக், ரொட்டி எல்லாம் கொண்டு வந்திருக்கேன் என்று பேத்தியின் குரலில் பேசியது ஓநாய்.

பேத்தி வந்துவிட்டாள் என்ற ஆவலில், பாட்டி கதவைத் திறந்தார். ஓநாய் பாய்ந்து, பாட்டியை விழுங்கிவிட்டது.

பாட்டி, கதறக்கூட நேரம் இல்லாமல் போனது.

பிறகு, சிவப்பு முக்காட்டு அழகியின் வருகைக்காக வீட்டுக்குள் காத்திருந்தது.

கொஞ்ச நேரத்தில் பேத்தியும் வந்தாள்.

பாட்டி... பாட்டி... நான்தான் உங்க பேத்தி சிவப்பு முக்காட்டு அழகி வந்திருக்கேன்? என்று கதவைத் தட்டினாள்.

வாடி என் செல்லம்... நீ வருவது எனக்குத் தெரியும்.

கதவு திறந்துதான் இருக்கிறது என்று பாட்டியின் குரலில் ஓநாய் பேசியது.

உடம்பு சரியில்லைனாலும் உங்க குரல் கணீர்னு இருக்கே என்றபடி உள்ளே நுழைந்தாள் பேத்தி.

பாட்டியின் மெத்தையில் போர்வையைப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தது ஓநாய்.

இதை அறியாத சிவப்பு முக்காட்டு அழகி, படுக்கைக்கு அருகில் போனாள்.

அவ்வளவுதான்... போரவையை வீசிவிட்டுப் பாய்ந்த ஓநாய், சிவப்பு முக்காட்டு அழகியை விழுங்கிவிட்டது.

உண்டகளைப்பில் பாட்டியின் படுக்கையிலேயே உறங்கிப்போனது.

பாட்டியின் வீட்டு வழியாக ஒரு வேட்டைக்காரன் வந்தான்.

அவனுக்குத் தாகமாக இருந்தது.

பாட்டியிடம் தண்ணீர் கேட்க எட்டிப் பார்த்தான்.

படுக்கையில் ஓநாய் படுத்திருப்பதைப் பார்த்து விட்டான்.

காட்டுக்கு அருகில் இருந்த கிராமங்களில்... மனிதர்களையும் வளர்ப்புப் பிராணிகளையும் விழுங்கி ஏப்பம் விட்ட ஓநாய் அது.

வேட்டைக்காரன் கண்ணில் படாமல் தப்பிக கொண்டே இருந்தது. 'இன்றைக்கு சரியாக மாட்டிக்கொண்டாயா?' என்று மெதுவாக ஓநாயை நோக்கி வந்தவன், திடுக்கிட் டான்.

ஒரு சிறுமி அழும் சத்தம் கேட்டது.

அந்தச் சத்தம் ஓநாயின் வய்யிற்றில் இருந்து வருவதைக் கண்டுபிடித்தான்.

தன்னிடம் இருந்த கத்தியால் ஓநாயின் வயிற்றைக் கிழித்து, சிவப்பு முக்காட்டு அழகியையும் அவள் பாட்டியையும் வெளியில் எடுத்தான்.

நல்லவேளையாக இருவருக்கும் ஒன்றும் ஆகவில்லை.

வேட்டைக்காரனுக்கு, பாட்டியும் சிவப்பு முக்காட்டு அழகியும் நன்றி சொன்னார்கள்.

அதற்குள் நீண்டநேரம் ஆகியும் திரும்பாத மகளைத் தேடி அம்மா வந்துவிட்டாள்.

நடந்ததைக் கேள்விப்பட்டு வேட்டைக்காரனுக்கு நன்றி சொன்னார்.

இப்ப, நீங்க தைரியமாக இந்தப் பாதையில் போகலாம்.

எந்தப் பயமும் இல்லை என்று வேட்டைக்காரன் சொன்னான்.

அம்மாவும் மகளும் அந்த ஒற்றையடிப் பாதையில் வீடு திரும்பினர்.

அப்போது, சிவப்பு முக்காட்டு அழகி அம்மாவிடம், என்னை மன்னிச்சிருங்க அம்மா, உங்க பேச்சைக் கேட்காததால், இவ்வளவும் நடந்துபோச்சு.

இனி இப்படி நடக்காது என்றாள்.

பரவாயில்லை, இனி ஜாக்கிரதையாக இருந்துக்க என்று சொல்லி, மகளை அணைத்துக் கொண்டாள்.

(முற்றும்)




- 1485 - ஏழாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1502 - வாஸ்கொடகாமா இரண்டாவது தடவையாக கோழிக கோடு வந்தார்.
- 1831 - ஐக்கிய அமெரிக்காவில் அடிமை கிளர்ச்சி செய்த நாட்டர்னர் வேர்ஜீனியாவில் கைது செய்யப்பட்டான்.
- 1905 - ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலாஸ் ரஷ்யாவின் முதலாவது அரசியலமைப்பை அறிவித்து பிரதிநிதிகள் அவையை நிறுவினான்.
- 1918 - ஒட்டோமான் பேரரசு கூட்டுப் படைகளுடன் உடன்பாட்டுக்கு வந்ததில் மத்திய கிழக்கில் முதலாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.
- 1920 - அவுஸ்திரேலியக் கம்யூனிஸ்ட் கட்சி சிட்னியில் அமைக்கப்பட்டது.
- 1922 - முசோலினி இத்தாலியின் பிரதமர் ஆனார்.
- 1925 - ஜோன் லோகி பயர்ட் பிரித்தானியாவின் முதலாவது தொலைக்காட்சி ஒளிபரப்பியை அமைத்தார்.
- 1941 - மேற்கு உக்ரைனில் 1,500 யூதர்கள் நாசிகளினால் பெல்செக் வதைமுகாமிற்கு அனுப்பப்பட்டனர்.
- 1945 - இந்தியா ஐ.நாவில் இணைந்தது.
- 1961 - சோவியத் ஒன்றியம் 50 மெகாதொன் அளவுள்ள "சார் பொம்பா" என்ற அணுகுண்டை வெடிக்க வைதத்து. இதுவே இந்நாள் வரை வெடிக்கப்பட்ட மிகப் பெரிய அணுகுண்டாகும்.
- 1961 - ஜோசப் ஸ்டாலினின் உடல் மாஸ்கோவின் கிரெம்லினில் லெனின் நினைவகத்திலிருந்து அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டது.
- 1964 - இலங்கையின் மலையகத் தமிழர்களை நாடு கடத்த உதவிய சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
- 1973 - ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைக்கும் பொஸ்பரஸ் பாலம் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் அமைக்கப்பட்டது.
- 1985 - சலேஞ்சர் விண்ணோடம் தனது கடைசி வெற்றிகரமான பயணத்தை ஆரம்பித்தது.
- 1991 - மத்திய கிழக்கு அமைதி மாநாடு மாட்ரிட் நகரில் ஆரம்பமானது.
- 1995 - கனடாவிலிருந்து பிரிந்து செல்ல கியூபெக் மாநிலத்தில் எடுக்கப்பட்ட மக்கள் வாக்கெடுப்பு 50.6% to 49.4% என்ற கணக்கில் தோற்கடிக்கப்பட்டது.
- 2006 - ஜெனீவாவில் விடுதலைப் புலிகளிக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தன.

### பிறப்புகள

- 1735 - ஜான் ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் (இ. 1826)
- 1821 - ஃபியோடார் டாஸ்டோவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ. 1881)
- 1909 - ஹோமி பாபா, இந்திய அணிவியல், இயற்பியல் ஆராய்ச்சியாளர் (இ. 1966)

### இறப்புகள்

- 1910 - ஹென்றி டியூனாண்ட், செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1828)
- 1973 - ரா. கிருஷ்ணசாமி நாயுடு, தமிழக அரசியல்வாதி (பி. 1902)
- 1975 - குஸ்டாவ் லுட்வீக் ஹேர்ட்ஸ், ஜேர்மனிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1979 - சுபத்திரன், இலங்கையின் முற்போக்கு இலக்கிய கவிஞர் (பி. 1935)
- 1999 - சௌமியமூர்த்தி தொண்டமான், இலங்கையின் மலையகத் தமிழர்களின் அரசியல் தலைவர் (பி. 1913).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




...ஆனால், அதற்கு நீண்ட நேரம் எடுக்கும். இதற்கு ஒரே வழி பந்தில் உள்ள தையலை நகம் கொண்டோ அல்லது குளிர்பான மூடி கொண்டே பிரித்துவிடுவதுதான். தரையில் விழும் பந்து தையல் பிரிந்து ஒழுங்கில்லாமல் இருப்பதால் கண்டபடி சுழன்று ஓடும். பேட்ஸ்மென் பந்து எந்த திசையில் வரும் என்று தெரியாமல் குழம்பி இறுதியில் அவுட் ஆகவும் அதிக வாய்ப்பு உண்டு. இந்த அழுகுணி ஆட்டத்தின் ஆணிவேர் பாகிஸ்தான்தான். இம்ரான்கான் காலத்தில் இந்தக் குறுக்கு வழி கண்டுபிடிக்கப்பட்டது.

தென் ஆப்பிரிக்காவிற்கு எதிரான ஆட்டத்தில் சச்சின் தனது விரல் நகத்தால் தையலைச் சேதப்படுத்துகிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டது. பசி எடுத்தால் சச்சின் நகத்தையே கடித்துச் சாப்பிடும் பழக்கம் உள்ளவர். எனவே, அவர் விரலில் நகமே இருக்காது. ஆக, தையலைக் கிழிக்கும் அளவிற்கு அவரிடம் நகமும் இல்லை. இருப்பினும் யாரோ கூறிய குற்றச்சாட்டைக் கையில் எடுத்துக் கொண்டு அவர் பௌலிங் செய்யும் காட்சிகள் வீடியோ திரையில் போட்டுப் பார்க்கப்பட்டன. பௌலிங் போட வேண்டுமானால் பந்தை விரல்களுக்கு இடையே பிடித்துதான் போட வேண்டும். அதைத்தான் சச்சினும் செய்தார். ஆனால், சச்சின் பந்தை விரல் இடுக்குகளில் பிடிக்கும் சாக்கில் யாருக்கும் தெரியாமல் லாவகமாக தையலைப் பிரித்து சேதப்படுத்துகிறார். எனவே, தண்டனையாக ஒரு டெஸ்ட் போட்டியில் இருந்து அவர் இடை நீக்கம் செய்யப்படுகிறார் என நடுவர் டென்னிஸ் தீர்ப்பளித்தார். வல்லான் வகுத்ததே வழி என்றாகி விட்ட நிலையில் தவறு எதுவுமே செய்யாத சச்சின் தண்டனை பெற்றார்.

**சென்னை சிதம்பரம் மைதானத்தில் தனது இருபத்தி ஐந்தாவது சதத்தை அடித்து சச்சின் மகிழ்வித்தார்.**



சச்சினின் செஞ்சுரிகள் 2001 ஆம் ஆண்டு ஜிம்பாவேயுடன் நடந்த போட்டிகளில் தொடர் கதை ஆயின. நியூ டெல்லியில் நடந்த முதல் போட்டியில் சதம் அடித்தார். நாக்பூரில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 201 ரன்கள் குவித்தார். இது அவருக்கு நான்காவது டபுள் செஞ்சுரி. கிரிக்கெட் வரலாற்றில் இருநூறாவது செஞ்சுரி. ஜோத்பூரில் நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டியில் மீண்டும் ஒரு சதம். இந்தியா டெஸ்ட் போட்டிகளை 1-0 என்றும், ஒருநாள் போட்டிகளை 4-1 என்ற கணக்கிலும் வென்றது. ஆனால், இதெல்லாம் போட்டி இல்லை. உண்மையான போட்டி பெப்ரவரி 2001 இல் தான் ஆரம்பமாகிறது. ஆம், ஆஸ்திரேலிய அணி இந்தியாவில் விளையாட வருகிறது. அவர்களை ஜெயித்து கோப்பையை வெல்வது தான் உண்மையான வெற்றி.

இந்திய மண்ணில் 1998 ஆம் ஆண்டு இந்தியா 2-1 என்ற கணக்கில் தொடரை வென்றது. எனவே, சொந்த மண்ணில் இந்தியாவைத் தோற்கடிக்க ஆஸ்திரேலியா தீவிரமாக இருந்தது. மொத்தம் 15 டெஸ்ட் போட்டிகளை ஆஸ்திரேலியா தொடர்ந்து வென்று வந்ததால் அந்த வெற்றி இங்கும் தொடர வேண்டும் என்று விரும்பியது. மும்பையில் முதல் டெஸ்ட் போட்டிகள் துவங்குவதற்கு முதல் நாள் கிரிக்கெட் உலகின் முடிசூடா மன்னன் டான் பிராட்மென் மறைந்

## 10,000 ரன்கள் 100 விக்கெட்டுகள்!

தார் என்ற செய்தி வெளியானது. 1998 இல் சச்சினும் வார்னேயும் அவருடன் கழித்த அந்த இனிமையான நினைவுகளில் மூழ்கி அது மனதுக்குள் அசை போட்டனர். மும்பையில் முதல் போட்டி துவங்கியது. சச்சின் 76 மற்றும் 55 ரன்கள் எடுத்தார். ஆஸ்திரேலியா அபாரமாக ஆடி முதல் போட்டியில் வெற்றி பெற்றது. கொல்கத்தாவில் நடந்த இரண்டாவது போட்டி இரண்டு சாதனைகளுக்கு வழிவகுத்தது. வி.வி.எஸ். லஷ்மன் அபாரமாக ஆடி 281 ரன்க ள் எடுத்தார். டெஸ்ட் போட்டிகளில் அதிக ரன் எடுத்த இந்தியா என்ற பெருமையையும் இணைத்துக் கொண்டார். இந்தப் போட்டியில் ஹர்பஜன்சிங் தொடர்ந்து மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தி ஹாட்ரிக் எடுத்த முதல் இந்தியர் என்ற பெயரைப் பெற்றார். இந்தியா 657 ரன்கள் குவித்தது. ஃபாலோ ஆன் கொடுத்த அணி தோல்வி அடைவது அரிதிலும் அரிதான ஒன்று. கிரிக்கெட் வரலாற்றில் இரண்டே முறைதான் அவ்வாறு நடந்துள்ளது. இருமுறையும் ஆஸ்திரேலியாதான் தோல்வியைத் தழுவியது. தொடர்ந்து 16 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்று வந்த ஆஸ்திரேலிய அணிக்கு இங்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

**கே. ரமேஷ்** *(தொடரும்)*

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

அன்பு ஒரு பொருள் அல்ல; அது தன்மை, அது நீங்கள்தான். நீங்களே அன்பாகி விடுகிறீர்கள். அவ்வளவே. பிறகு நீங்கள் ஒரு காரணமே இல்லாமல் அன்பாக இருக்கத் தொடங்கிவிடுவீர்கள். மரங்களையும், மலர்களையும், பூமியையும், எல்லாவற்றையுமே நேசிக்கத் தொடங்கிவிடுவீர்கள். நீங்கள்

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

வெறுமனே அன்பைப் பரப்பிக் கொண்டிருப்பீர்கள். நீங்கள் இந்த முழுப் பிரபஞ்சத்துடனும் ஒன்றாகி விடுவீர்கள். எல்லா எல்லைக் கோடுகளும் மறைந்து நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் ஒன்றாகக் கலந்துவிடுவீர்கள்.

பாருங்கள்; நீங்கள் அன்பில் வளரும் பொழுது எல்லோரையும் உங்களுக்குள் சேர்த்துக் கொள்ளக் கற்றுக் கொள்கிறீர்கள். நீங்கள் ஒரு குருவைப் பார்க்கும் பொழுது எவ்வாறு அவர் அனைத்தையும் அவருக்குள் அடக்கிக் கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வீர்கள். அவர் எதையும் யாரையும் ஒருபோதும் விலக்கி வைப்பதில்லை. அவர் யாரிடமும் குறைபாடுகளைக் காண்பதில்லை. அவர் ஒரு வெறும் தூய அன்பு, அவ்வளவுதான். தூய அன்பு எப்பொழுதும் குறைபாடுகளைக் காண்பதில்லை.

பிரபஞ்ச இருப்புத்தன்மை தூய



அன்பாக இருக்கிறது. சமூகம் எப்பொழுதும் தூய அன்பிற்கு எதிராகவே இருக்கிறது. ஆழ்ந்து உள்ளே நோக்கினால், உண்மையிலேயே சமூகம் பிரபஞ்ச இருப்புத் தன்மை அல்லது கடவுளுக்கு எதிராகவே இருக்கிறது. அதன் வழிபாடுகள் [illegible] வேஷம் தான். அது [illegible] ஒளிந்து கொள்கிறது. எதையும் ஆழ்ந்து பின்பற்றாமலிருக்க ஒரு சிறந்த வழி அதை வழிபடத் தொடங்கி விடுவதுதான்! சமூகம் வழிபாடு என்ற பெயரில் தப்பித்துவிடுகிறது. நீங்கள் வழிபடும்போது வேறு எதையும் செய்ய வேண்டியதில்லை! [illegible] மேலும் நீங்கள் வழிபட்டுக் கொண்டிருப்பதால் மக்கள் உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள்! ஆனால் உங்கள் உள்வெளி என்னவாகிறது? வளர்ச்சி எதுவும் நிகழாமல் அது இருந்த இடத்திலேயே இருக்கிறது.

நீங்கள் விட்டுவிடுவதாயிருந்தாலோ, எல்லா பிராணிகளையும் தாவரங்களையும் முடிவற்ற அன்பினால் நேசித்துக் கொண்டிருந்தாலோ, உங்களை சமூகம் ஒருபோதும் அங்கீகரிக்காது. அது உங்களைப் பைத்தி

### ஆன்மீகம் 59

யம் என்று சொல்லும். அது கொடுக்கல், வாங்கலால் ஆளப்படுகிற, ஒரு காரணத்துடன் வருகிற, சமூக அன்பை மட்டுமே அங்கீகரிக்கும்.

ஆனால், சாமி சொல்கிறேன்; மனைத் தளர விட்டு விடாதீர்கள். உங்கள் முழு இதயத்துடன் அன்பாக இருந்துகொண்டிருங்கள். எல்லாவற்றிலும் பிரபஞ்ச இருப்புத் தன்மையைப் பாருங்கள். தாவரங்களை உங்கள் மென்மையான இதயத்துடன் உணருங்கள். பிராணிகளை உங்களுடையதாகப் பாருங்கள். ஒவ்வொரு மனிதனையும் கடவுளின் ஒரு அங்கமாகப் பாருங்கள்.


*(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015

02



## முன்னேற்ற மீளாய்வு 2006-2014

கௌரவ சபாநாயகர் அவர்களே, எம்து பத்துவருட பயணமானது உண்மையில் ஒரு முன்னேற்றகரமான பயணமாகும். பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியிருந்த பிரதேசங்கள் தற்பொழுது தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்களினால் ஜனநாயகத்தினையும் சுதந்திரத்தினையும் அனுபவிக்கின்றன.

சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று வீடு திரும்புகின்ற பொழுது விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் கைகளில் அகப்பட்டு இறுதியில் சிறுவர் போராளிகளாக மாறி விடுவார்களா என்ற பயம் இல்லாது போயுள்ளது.

இப்பிரதேசங்களில் தாய் சேய் இறப்பு வீதங்கள் பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளன. கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்த நிலங்கள் செழிப்புமிக்க பசுந்தரைகளாக மாறியுள்ளதுடன் மக்களுக்கான வருமான வாய்ப்பினையும் வழங்குகின்றது.

ஏறக்குறைய 30 வருடங்களாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.5 சதவீதமாக காணப்பட்ட பாதுகாப்புச் செலவினம் தற்பொழுது 3 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதுடன் அபிவிருத்தி மற்றும் அரசாங்க சேவைகளுக்கு செலவிடுவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த மாற்றத்தினை நாம் அடைந்து கொண்டது அனைத்து தரப்பினரும் பங்குபற்றிய அபிவிருத்தியின் மூலமாகும்.

அக்காலத்தில் நகரப் புறங்களுக்கு மாத்திரம் கிடைக்கக் கூடியதாகவிருந்த மின்சாரத்தினை தற்பொழுது ஒவ்வொரு குடும்பமும் அனுபவிக்கின்றன.

போக்குவரத்து துறையானது பாடசாலைகள், வைத்தியசாலைகள், சந்தைகள் மற்றும் வேலைத் தளங்கள் என்பவற்றினை இலகுவாக அடைந்து கொள்ளும் வகையில் முன்னேற்றமடைந்துள்ளது.

முழு சனத்தொகையும் தொலைத் தொடர்பு வசதிகளை அனுபவிக்கின்றது. நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் சிறந்த கல்வி மற்றும் சுகாதார நலன்புரியினை வழங்கும் வகையில் தரமுயர்த்தப்பட்டுள்ளன. புதிய தோற்றத்தில் நிர்மாணிக்கப்படும் வாராந்தச் சந்தைகள் வியாபாரச் சந்தை வசதியினை விருத்தி செய்துள்ளன.

2017 அளவில் தரமான குடிநீரினை ஒவ்வொரு வீட்டுரிமையாளரும் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்தும் வகையில் துரிதப்படுத்தப்பட்ட குழாய் நீர் வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

திவிநெகும, கமநெகும மற்றும மகளிர் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக கிராமிய அபிவிருத்தி உபாயங்களுக்கு பெறுமதி சேர்க்கப்படும் வகையில் அரசாங்கம் இவற்றினை மேற்கொள்கின்றது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத்திட்டமானது ஜப்பானியப் பிரதமர் மற்றும் மக்கள் சீனக் குடியரசின் ஜனாதிபதி ஆகிய இருவரும் எமது நாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டதன் பின்னராகும்.

பெரும்பாலான நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள், நிதி அமைச்சர்கள், சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் எமது நாட்டிற்கு இவ்வருடத்திற்குள் விஜயம் செய்துள்ளனர்.

இலங்கையுடன் மேற்கொள்ளும் அபிவிருத்தி பங்களிப்புகளை உறுதிப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவரும் எமது நாட்டிற்கு விஜயம் செய்தார்.

இவ்வருடத்தின் செப்டெம்பர் மாதத்தில் இரண்டு நாட்கள் ஆசியாவின் அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டினை நாம் நடத்தினோம்.

கடந்த வருடம் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றிய பொது நலவாய அரசாங்கத் தலைவரகளின் மாநாட்டினையும் நாம் நடத்தினோம்.

சர்வதேச உறவுகளை உயர்ந்த மட்டத்தில் பேணுகின்றளவு எமது அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை வெற்றியளித்துள்ளமை இதன் மூலம் தெளிவாகின்றது.

ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையினை பயன்படுத்தி ஒரு சிலரின் ஒத்துழைப்புடன் மறைமுகமான பின்னணிகளுடன் இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகத்தினை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட பொய்ப் பிரசாரங்கள் மற்றும் தவறான வழிநடத்தல்கள் எந்தளவிற்கு பிழையானவை என்பதனை எடுத்துக் காட்டுவதற்கு இது உதவியது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் பிடியிலிருந்து எமது மக்களை மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது நாம் இனரீதியான எந்தவொரு இராணுவ செயற்பாட்டினையும் மேற்கொள்ளவில்லை. அனைவருக்கும் சமாதானமும் பாதுகாப்பும் கிடைக்கப் பெற்றுள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளதுடன் அவர்களது வாழ்வாதாரங்களை விருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்ட வளங்களைக் கொண்டு முன்னாள் விடுதலைப் புலி போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது குடும்பங்களுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 3,000 இற்கு அதிகமானவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் பொலிஸ் சேவையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மிகவும் கடின போராட்டத்திற்கு மத்தியில் பெற்றெடுக்கப்பட்ட சமாதானத்தினை வளர்த்தெடுப்பதற்கான நல்லிணக்க செயன்முறைகளினை நாம் ஆரம்பித்துள்ளோம்.

எமது நாடு பல வருடங்களாக அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் எவ்வாறு ஆளப்பட்டது என்பதனை நாம் அனைவரும் நன்கறிவோம்.

அவசரகால நிலைமைகள் நீக்கப்பட்டதுடன் நாடு முழுவதிலும் அரசாங்க சேவைகள் மீள அமுல்படுத்தப்பட்டு வட மாகாண சபை தேர்தல்கள் உள்ளடங்கலாக கிரமமான தேர்தல்கள் நடத்தப்பட்டதுடன் ஊடக சுதந்திரமும் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி சூழலில் குறிப்பிடத் தகக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை காணக் கூடியதாகவுள்ளது. 1987 இல் மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முதல் தடவையாக தற்பொழுது 9 மாகாண சபைகளும் செயற்பட்டு வருகின்றன.

எமது உள்நாட்டு பிரச்சினைகளை விளங்கிக் கொண்ட நிலையில் சர்வதேச சமுதாயம் வழங்கிய கூட்டு ஒத்துழைப்பினை பாராட்டும் அதேவேளை, தேசியப் பாதுகாப்பு, சமாதானம் மற்றும் அபிவிருததியில் சரவதேச தலையீடுகள் எதுவும் இருகக் கூடாது என்பதனை இந்த பாராளுமன்றத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் நாம் அடிக்கடி விளக்கியுள்ளோம்.

ஜனநாயக வழிமுறையில் எமது நாட்டில் பன்முகத்தன்மையினை வெற்றிகரமாக பேணி வருவதனை உலகம் பாராட்டுதல் வேண்டும். தேரதல்கள் மூலம் ஏற்கனவே மாகாண சபைகள் தொழிற்பட்டு வருகின்றன என்ற வகையில் இலங்கையின் பன்புலத்தில் பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வுகளை காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட குழுக்கள் பாராளுமன்ற தெரிவுக் குழுவுடன் இணைந்து செயற்படுவது அவசியமாகும்.

தனியான 9 மாகாண சபைகளுக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான அதிகாரப் பரவலாக்கலுக்கான நியாயப்படுத்தலினை என்னால் அவதானிக்க முடியாதுள்ளதுடன் இது சட்டம் மற்றும் ஒழுங்கு, தேசியப் பொருளாதாரம் என்பவற்றின் சிறந்த நலனுக்கு எவ்வாறு ஒத்துழைக்கின்றது என்பதனை என்னால் அவதானிக்க முடிகின்றது.

தரத்தினை உறுதிப்படுத்தும் வகையில் கல்வி, சுகாதாரம், வறுமை தணிப்பு மற்றும் சமூக சேவைகள் என்பவற்றிற்கான தேசிய தராதரங்களை நாம் உருவாக்க வேண்டியுள்ளது.

இதற்காக பிரதேச சபைகள், மாகாண சபைகளில் மக்கள் சபைகளை நாம் எவ்வாறு வடிவமைப்பது என்பதனையும் அர்த்தமுள்ள செலவு குறைந்த அரசாங்க வேலைச சட்டகமொன்றின் ஊடாக அரசாங்கத்துடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவது எவ்வாறு என்பதனையும் நாம் ஆராய வேண்டியுள்ளது.

எனவே, மாகாண சபைகளை எமது மக்கள் அனைவரினதும் அபிவிருத்திக்கு இன்னும் அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு யதார்த்தபூர்வமான அரசியல் முன்மொழிவுகளை கண்டறிவதற்கான அனைத்து விதமான சிந்தனாரீதியான தடைகளை விட்டும் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

மிகவும் கடினமாகப் பெறப்பட்ட சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திலிருந்து நாம் நல்ல பல பயன் [illegible] [illegible] கருக்களை முன்நிறுத்துவதற்குப் பதிலாக பிராந்தியத்தில் உறுதியான பொருளாதாரத்துடன் கூடிய இணைந்த சமுதாயம் ஒன்றினை கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் செயற்பட வேண்டியுள்ளது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்காக அரிசியினை அன்பளிப்புச் செய்ததுடன் உலக சுகாதார நிறுவனத்தினூடாக ஆபிரிக்காவில் எபோலா வைரஸினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு மருத்துவ கையுறைகளையும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் மக்களுக்காக மருத்துவ உதவி, சூடானில் மனிதாபிமான நடவடிக்கைகளில் எமது பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்தியமை, பாலஸ்தீன மக்களுக்காக வழங்கப்பட்ட 1 மில்லியன் ஐக்.அமெ. டொலர் பெறுமதியான மனிதாபிமான உதவிகள் என்பவற்றினையும் அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்த வகையில் எமது நாடு மனிதாபிமான உதவிகளைப் பெறும நாடு என்ற நிலைமையிலிருந்து மனிதாபிமான உதவிகளை வழங்குகின்ற நாடுகளின் அந்தஸ்திற்கு மாறியுள்ளது என்ற வகையில் இது பெருமைப்படக்கூடிய விடயமொன்றாகும். இவை உலகத்தில் மனிதாபிமானத்தினை ஊக்குவிப்பதற்கும் சமாதானத்தினை கட்டியெழுப்புவதற்கும் நாம் எடுத்த முயற்சிகள் என்பதுடன் உலக சமாதானத்தினை உறுதிப்படுத்துவதற்கான எமது விருப்பமுமாகும்.

எமது பாதுகாப்புப் படையினர், எமது விவசாயிகள், எமது ஊழியப் படை, வெளிநாட்டில் பணியாற்றுகின்ற எமது பெண்கள் மற்றும் சிறுதொழில்முயற்சியாளர்கள், நாடு முழுவதிலுமுள்ள எமது ஆசிரியர்கள், எமது சுகாதாரப் பணியாளர்கள், எமது கிராமிய மட்ட அரசாங்க ஊழியர்கள், எமது சமயத் தலைவர்கள், எமது கலைஞர்கள், வளர்ந்து வரும் பொருளாதார சமுதாயம் மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள், உலக நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் அனைவரும் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் மாத்திரமே இவை அனைத்தினையும் எம்மால் மேற்கொள்ள முடியும். மேலே குறிப்பிட்ட எமது அனைத்து மக்களும் உலகத்திலுள்ள முன்னேற்றமடைந்த எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் காணப்படுகின்ற நல்லாட்சியின் ஜனநாயக நிறுவன ஏற்பாட்டிற்கு பெறுமதி சேர்க்கக் கூடிய சமாதானமான தேர்தல் ஒன்றில் பங்குபற்றுவதன் மூலம் ஜனநாயகத்தில் கொண்டுள்ள நம்பிக்கையினை அதகரித்தல் வேண்டும்.

சமாதானம், தேசிய நல்லிணக்கம் மற்றும் பயங்கரவாத யுத்தம் நிறைவடைந்ததிலிருந்து நாம் பெற்றுக் கொண்ட ஜனநாயக வழிமுறையில் தொடர்ந்து அடையப் பெற்ற பொருளாதார முன்னேற்றம் என்பவற்றினை ஊக்குவிப்பதற்கு எவ்வித நிபந்தனைகளுமற்ற வகையில் அவர்கள் வழங்கிய பங்களிப்புக்கு எமது மனப்பூர்வமான பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டிலுள்ள மொத்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 47 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மூன்று மாகாணங்களில் இவ்வருடத்தில் இடம்பெற்ற தேர்தல்களில் 54 சதவீதமானவை ஐக்கிய மக்க்ள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு வாக்களிக்கப்பட்டதாகும்.

எமது சிறுவர்களின் எதிர்காலத்திற்காகவும் நாடு முழுவதிலும் சமாதானம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றை கட்டியெழுப புவதற்குமாக வடிவமைக்கப்பட்ட "மஹிந்த சிந்தனை-எதிர்காலத்திற்கான தேசிய தூர நோக்கு" இல் பெரும்பாலான மக்கள் தமது நம்பிக்கையினை வைத்திருக்கின்றனர் என்ற விடயம் எமது அரசாங்கத்தினை பெரிதும் ஊக்குவிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

**சுகாதாரமும் உடற்கல்வியும்** — **மூன்று மணித்தியாலங்கள்**

## பகுதி II

**முதலாம் வினா உட்பட முதலாம் பகுதியில் ஏனைய இரண்டு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் வேறு இரு வினாக்களை தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடைதருக.**

01. ஜெயகம வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதேச வாசிகள் அனைவரையும் காணக்கூடியதாக இருந்தது. கிராமிய இசை, றபான் இசைத்தல், மரதன் போட்டிகள், சைக்கிள் போட்டிகள் போன்ற பல போட்டிகள் நடைபெற்றன. கயிறு இழுத்தல் போட்டியில் ஆறு அணிகள் பங்கேற்றன.

இதில் நிலங்கையின் அணி அனைவரின் உற்சாகத்தின் மத்தியில் வெற்றிபெற்றது. பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் பங்கேற்றார். மாலை தேநீரின் போது இலை அல்வா (அலப்ப), பயறு உருண்டை, கொக்கீஸ் போன்ற தேசிய உணவுகள் காணப்பட்டன. இரவில் பரிசளிப்பு விழாவின் போது இசைக்குழுவின் இசைக்கச்சேரி அமோக வரவேற்பை பெற்றது.

1. இந் நிகழ்வின் படி இப்போடிகளில் பங்கு கொள்வதால் ஏற்படும் நன்மைகள் 2 கூறுக?
2. மரதன் போட்டியில் பங்கேற்ற கருனா சட்ன என்பவர் சக்தியை பெறுவதற்காக அவர் பயன்படுத்திய சுவாசமுறை என்ன?
3. சைக்கில் ஓட்டப்போட்டி வீரர்கள் இறுதி 200 m தூரத்தை மிக வேகமாக அடைந்தார்கள். அவர்களிடம் காணக்கூடிய உடற்தகைமைகள் இரண்டைக் கூறுக?
4. மேற்குறிப்பிட்ட பந்தியில் அல்லாத வேறு இரண்டு தரமான தேசிய உணவு வகைகள் இரண்டை தருக?
5. காலணியின்றி மரதன் போட்டியில் பங்கெடுத்த் நிகால் என்பவரின் காலில் நீர் தொப்பளங்கள் தோன்றின. இவ்வாறாக விளையாட்டின் போது ஏற்படும் வேறு காயங்கள் இரண்டை தருக?
6. தசைக்கிழிவு ஏற்பட்ட ஜனித் என்பவருக்கு வழங்கக்கூடிய முதலுதவி யாது?
7. 6 அணிகள் பங்குபற்றும் கயிறு இழுத்தல் போட்டிற்கான விலகல் போட்டிக்கான அட்டவணையை தருக?
8. மேற்படி போட்டியிலே நீர் காணும் இரண்டு அனுகூலங்களை எழுதுக?
9. மேற்படி விலகல் சுற்றில் காணப்படும் பிரதிகூலங்கள் இரண்டைத் தருக?
10. இவ்வருடாந்த விளையாட்டு போட்டியின் பின்னான ஒழுங்கமைப்பு இரண்டினை குறிப்பிடுக?

## பகுதி I

**இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

02. தரம் 11 ல் கற்கும் முஜிதா பாடசாலையில் அனைவரதும் பாராட்டுக்குரிய வீராங்கனை. அவள் உணவு உட்கொள்ளுதலின் போது நிறையுணவை பெறுவதில் கூடிய கவனம் செலுத்தினாள். தமது கல்விக்கு முன்னுரிமை வழங்கும் அவள் மிகவும் ஞாபக சக்தியை கொண்டவள் என்பது அனைவரது கருத்தாகும்.

1. சிறந்த வீராங்கனையான முஜிதா தனது உடற் சுகாதாரத்தை பேணுவதற்கு செய்யக் கூடிய இரண்டு விடயங்களை தருக?
2. உளச்சுகாதாரம் என்ன என்பதை விபரித்து முஜிதாவின் உளச்சுகாதாரம் பற்றிய உமது கருத்து யாது?
3. சமூக சுகாதாரத்தில் விருத்தியடைந்த முஜிதா மேலதிகமாக பெறுகின்ற அனுகூலங்கள் நான்கினைத் தருக?

03. இளமையின் வனப்பு எனும் தலைப்பிலே சுகர்னா பத்திரிகைக்கு கட்டுரை ஒன்றை வரைந்தார். அதில் கட்டிளமைப்பருவம் என்றால் என்ன, கட்டிளமைத் தேவைகள் எவை, கட்டிளமைப் பருவத்தின் உடலியல் மாற்றங்கள் எவை போன்ற விடயங்கள் காணப்பட்டதாக அதிபர் கூறினார்.

1. உலக சுகாதார ஸ்தாபனம் கட்டிளமைப் பருவத்தை உந்த வயதின் கீழ் அடக்குகின்றது?
2. பத்திரிகைக்கு சுகர்னா எழுதியிருக்கக்கூடிய தேவைகள் எவை?
3. ஒரு ஆண்பிள்ளையின் கட்டிளமைப் பருவத்தின் போது காணக்கூடிய உடலியல் மாற்றங்கள் ஐந்தை தருக?

04. கீழ்வரும் அறைகூவல்களுக்கு நீர் முகம்கொடுக்கும் முறைமைகளை விளக்குக.


1. பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் மாணவன் ஒருவனுக்கு கொடுக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு உடந்தையாக இருப்பவர் உமது நண்பன் என அறிந்ததால் நீர் செய்ய வேண்டியது?
2. பாடசாலை விளையாட்டு போட்டியின் பின்பாக மதுபானம் அருந்தும்படி உம்மை வற்புறுத்தல் !
3. பாலியல் சம்பந்தப்பட்ட ஒளிநாட உள்ளிட்ட கையடக்க தொலைபேசியை பாடசாலைக்கு கொண்டுவந்திருந்த நண்பன் உம்மையும் அதனை பார்ப்பதற்கு அழைத்தார்?

## பகுதி II

**இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

05. குண்டு எறிதல் போட்டியில் பங்கு பற்றிய தீபிகா தனது எறிதலின் பின் தனது போடுதலில் தான் எதிர்பார்த்த தூரத்தை அடையாது இருந்தமையால் மைதானத்தின் முன் பக்கமாக இடது காலால் அடையாளமிட்டு மைதானத்தின் பின்புறமாக வெளியேறினாள்.

1. இப்போட்டியில் நீர் நடுவராயின் உம்முடைய தீர்ப்பு என்ன?
2. கீழ்வரும் மெய்வல்லுநர் நிகழ்ச்சியின் பிரிவுகளை உள்ளடக்கிய அட்டவணையை பூர்த்தி செய்க.




3. 400m ஓட்டப்பாதை ஒன்றிலே 400x100m அஞ்சல் ஓட்டப் போட்டியில் பங்கு எடுக்கும் முதலாவது ஓட்ட வீரனிடமும் இறுதி ஓட்ட வீரனிடமும் காணக்கூடிய இவ்விரண்டு திறன்களை குறிப்பிடுக.

06. தடைதாண்டல் ஓட்டப்போட்டியிலும் உயரம் பாய்தல் போட்டியிலும் திறமையுள்ள சம்மா 100m தடைதாண்டல் போட்டியிலே இலங்கை சாதனைப்பதிவிற்கு உரித்தானவர்.

1. தடைதாண்டல் ஓட்டப்போட்டியிலே காணப்படும் முறைமைகள் நான்கில் இரு திறன்களைத் தருக?
2. தடைதாண்டல் போட்டி ஒன்றில் போட்டியாளரை போட்டியிலிருந்து விலக்கக்கூடிய காரணங்கள் இரண்டைத்தருக?
3. உயரம் பாய்தல் போட்டியின் முறை ஒன்றை குறிப்பிட்டு அதன் திறன்களை படிமுறையாக தருக?

07. ஏழாம் வினாவின் (A,B,C) ஏதாவது பிரிவு ஒன்றிற்கு மட்டும் விடையெழுதுக.

(A) வொலிபோல் போட்டி ஒன்றில் ரஜஇல வித்தியாலய மாணவர்கள் போட்டி முடிவடைந்த பின் பொறுப்பாசிரியர் விமுர்த்தி 'எமது அணி தோல்வி அடைவதற்கு பிரதானமாக அமைந்தது பணித்தலின் போது ஏற்பட்ட குறைபாடே' எனத் தெரிவித்தார்.

1. பணித்தல் அல்லாத வேறு திறன்கள் 3ஐ குறிப்பிடுக?
2. பணித்தலின் போது கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்கள் 3ஐ தருக?
3. வொலிபோல் போட்டி ஒன்றில் ஆரம்பிக்கும் போது வீரர்கள் நிலை கொள்ள வேண்டிய வரைபடம் ஒன்றை வரைந்து காட்டுக?

(B) வலைப்பந்தாட்ட போட்டி ஒன்றிலே வான்கலை பாடசாலை மாணவரின் போட்டி முடிபடைந்த பின் பொறுப்பாசிரியர் நயன 'எமது அணி தோல்வி அடைந்தமைக்கு காரணம் பேற்றுக்கெய்தலின் குறைபாடுகளே' என சுட்டிக்காட்டினார்.


1. பேற்றுக்கெய்தல் திறன் தவிர்ந்த ஏனைய திறன்கள் மூன்றைத் தருக?
2. பந்து எய்தலின் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுக?
3. வலைப்பந்தாட்ட போட்டியின் போது வீராங்கனைகள் மைதானத்தில் நிலை கொள்ள வேண்டிய முறைமைகளை விளக்குக.

(C) உதைபந்தாட்ட போட்டி ஒன்றில் பங்கேற்ற நில்அல வித்தியாலய மாணவர்களுக்கு போட்டி முடிவின் போது பொறுப்பாசிரியர் ஜெயலத் இவ்வாறு கூறினார். எமது அணியின் தோல்விற்கு பந்துக்கட்டுப்பாடு (ball controlling) இல்லாமையே காரணமாகும் எனக் கூறினார்.

1. பந்துக்கட்டுப்படுத்தல் தவிர்ந்த ஏனைய திறன்கள் (Skills) மூன்றை குறிப்பிடுக?
2. சட்ட வலுவான செயற்பாடுகள் மூன்றினை குறிப்பிடுக?
3. உதைபந்தாட்ட மைதானத்தை வரைந்து அதன் அளவு பிரமாணங்களை குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ரொக்கெட் வெடித்துச் சிதறியது



சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு தேவையான பொருட்களை எடுத்து சென்ற பெயரிடப்படாத அமெரிக்காவின சரக்கு ரொக்கெட் ஒன்று நேற்று முன்தினம் இரவு ஏவிய சில நிமிடங்களில் வெடித்து சிதறியது.

5,055 பவுண்ட்ஸ் எடை கொண்ட அறிவியல் சோதனைகள் மற்றும் உபகரணங்களோடு சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு 6.22 மணிக்கு கிளம்ப தயாராகயிருந்தது.

கிழக்கு வெர்ஜினியாவில் நாசா ஏவுதளத்திலிருந்து கிளம்பிய இந்த ரொக்கெட் , புறப்பட்ட சில நிமிடங்களில் தீப்பிழம்புகளுடன் வெடித்து சிதறியது. இந்த சம்பவத்தில் யாருக்கும்காயம்ஏற்படவில்லை. ரொக்கெட் ஏவுதளத்திற்கு குறிப்பிடத்தக்க வகையில் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது அதிகாரிகள் தெரிவித்தனர். இது குறித்து தீவிர விசாரணைக்கு நாசா உத்தர விட்டுள்ளது. (இ-5)

# சீனாவிலும் எபோலா நோய் பரவ வாய்ப்பு!

ஆபிரிக்காவில் பணி புரிந்து வரும் சீனர்கள் நாடு திரும்பும்போது அவர்கள் மூலமாக எபோலா நோய் சீனாவில் பரவ வாய்ப்புள்ளதாக விஞ்ஞானியொருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எபோலா நோய்க் கிருமியைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளில் ஒருவரான பீட்டர் பையட் அந்நோய் குறித்து பெய்ஜிங்கில் நடைபெறும் இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசினார். அங்கு அவர் தெரிவித்த விபரங்கள் குறித்து சீன நாளிதழான சீனா மார்னிங் போஸ்ட் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ள விபரம் வருமாறு,

ஆபிரிக்காவில் ஏராளமான சீனர்கள் பணியாற்றி வருகின்றனர். தங்களது தாய்நாட்டுக்கு அடிக்கடி பயணம் மேற்கொள்வதால், எபோலா நோய் கிருமி அவர்கள் மூலமாக சீனாவில் பரவுவதற்கு சாத்தியம் உள்ளது.

சீன மருத்துவ மனைகளில் சுகாதாரப் பாதுகாப்பு போதுமான அளவில் இல்லை. மேலும், குவாங்ஜ் நகரில் ஆயிரக்கணக்கான ஆபிரிக்க வணிகர்கள் உள்ளனர். இவர்களின் சீனா-ஆபிரிக்கா பயணம் மூலமாகவும் நோய்க் கிருமி பரவ வாய்ப்புள்ளது.

ஹாங்காங் விமான நிலையத்தில் சர்வதேச விமானப் போக்குவரத்து மிக அதிகமாக உள்ளது. ஆனால், அங்கு எபோலா கண்காணிப்பு போதுமானதாக இல்லை. எபோலா நோயைக் கண்டு பிடிக்க மிகக் குறைந்த விலையில், மிகப் பாதுகாப்பான இரத்தப் பரிசோதனை முறைகள் உள்ளன. இந்தப் பரிசோதன்னயை மேற்கொள்ள வெறும் 10 நிமிடங்கள் போதும்.

இந்த நோயால் பாதிப்பு அடைந்தவர்களின் உடலிலிருந்து வெளியேறும் திரவங்கள் உள்ளிட்ட வற்றால் தான் எபோலா பரவும். காற்று மூலம் நோய் பரவுவதாக மருத்துவ ரீதியாக எந்தச் சான்றும் இல்லை என்றார்.

இதுவரை லைபீரியா, கினி, சியரா லியோன் ஆகிய மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இந்நோய் பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளது. பத்தாயிரம் பேருக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 5 ஆயிரம் பேர் உயி ரிழந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

மூன்று நிறுவனங்கள் இந்நோயைத் தடுக்கும் மருந்தை உருவாக்கும் ஆராய்ச்சியில் இறங்கியுள்ளன. அந்த மருந்துகள் அடுத்த ஆண்டு பயன்பாட்டுக்கு வர வாய்ப்புள்ளதாகக்கூறப்படுகிறது.

எபோலா தடுப்பு நடவடிக்கைக்கு 80 மில்லியன் டொலர் நிதி உதவி அளிப்பதாக சீனா அறிவித்துள்ளது. இதைத் தவிர, நோய் தடுப்பில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களின் பயன்பாட்டுக்குப் பாதுகாப்பு உடைகள், மருத்துவ சாதனங்களை சீனா வழங்கி வருகிறது. (இ-5)

# சார்ஜாவில் கோர விபத்து இருவர் தலை துண்டானது



## 4 பேர் பலி

சார்ஜாவின் விரைவு நெடுஞ்சாலையில் நேற்று முன் தினம்அதிகாலை நிகழ்ந்த கோர விபத்தில் ஒரு இந்தியர் உட்பட 4 பேர் பலியாகினர்.

சார்ஜா இராணுவத்தில் பணியாற்றும் ஒரு அதிகாரி, தனது இராணுவச்சீருடையை சலவைக்கு போட்டிருந்ததை மறந்து போய் தனது அன்றாட அலுவல்களில் மூழ்கிப் போனார்.

உயரதிகாரிகளின் அவசர கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதையடுத்து, அந்த கூட்டத்தில் பங்கேற்பதற்கு அவர் தயாரானபோது, மிடுக்கு கலையாத சீருடைகள் தன்னிடம் இல்லாததை கண்டு திடுக்கிட்ட அவர், சலவைக்கு துணி போட்ட கடைக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.

நள்ளிரவு சுமார் 2 மணி ஆனதால், கடை மூடப்பட்டிருக்கவே, அதில் வேலை செய்யும் ஊழியர்களை தேடிச் சென்ற அவர், இருவரை தனது காரில் ஏற்றிக் கொண்டு வேகமாக ஓட்டும்படி சாரதியிடம் கூறினார்.

அவசரமாக காரை ஓட்டிய சாரதி, சார்ஜா விமான நிலையம் அருகே வீதியோரமாக பழுதாகி நின்றிருந்த லொறியை கவனிக்கத் தவறிய அதே வேளையில், அந்த லொறியின் பின்புறத்தில் பயஙகர சத்தத்துடன் மோதிய கார், இரண்டு துண்டங்களாகியது.

முன் இருக்கையில் அமர்ந் திருந்த சாரதி உட்பட இருவர் தலை துண்டிக்கப்பட்டு, கண்ணாடி வழியாக வெளியே தூக்கி வீசப்பட்டனர். இராணுவ அதிகாரி உட்பட பின் இருக்கையில் அமர்ந்திருந்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்ததையடுத்து, இந்த விபத்தில் மொத்தம் 4 பேர் பலியாகினர். (இ-3)

# ஆபிரிக்க நாட்டவருக்கு விசா வழங்கல் நிறுத்தம்

## அவுஸ்.அறிவிப்பு

ஆபிரிக்காவின் மேற்கு பகுதி நாடுகளான லைபீரியா, சியாரா லியோன், கினியா உள்ளிட்ட நாடுகளில் எபோலா நோய் வேகமாக பரவி வருகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் பரவிவரும் இந்த நோய்க்கு, சுமார் 5 ஆயிரம் பேர் இதுவரை பலியாகி உள்ளனர்.

இதனால் அதிர்ச்சியடைந்து வரும் உலக நாடுகள், எபோலா தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

அந்தவகையில் எபோலாவுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அவுஸ்திரேலியா, முதற்கட்டமாக மேற்கு ஆபிரிக்க நாட்டினருக்கு விசா வழங்குவதை இரத்து செய்துள்ளது.

இந்த நாட்டினரிடம் இருந்து வரும் விசா விண்ணப்பங்களை பரிசீலிக்க முடியாது என அவுஸ்திரேலிய குடியேற்றத்துறை அமைச்சர் ஸ்காட் மாரிசன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், மேற்கு ஆபிரிக்க நாட்டினருக்கான நிரந்தர மற்ற அல்லது தற்காலிக விசா இரத்து செய்யப்படுவதுடன், அவுஸ்திரேலியாவுக்கு இன்னும் வந்துசேராத நிரந்தர விசாதாரர்கள், இனி மேல் தகுந்த மருத்துவ சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேணடும் என்று தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் எபோலா நோய்க்கான அறிகுறிகள் இதுவரை தென்படவில்லையென்றாலும், அங்கு இந்த நோய் பற்றிய அச்சம் பரவலாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ)




# ஈரானில் தூக்கிலிடப்பட்ட பெண் தாய்க்கு அனுப்பிவைத்த செய்தி



ஈரானில் கற்பழிக்க முயன்றவரை கொலை செய்ததற்காக தூக்கிலிடப்பட்ட ரெய்ஹெனே ஜப்பாரி எனும் பெண தனது தாய்க்கு இறுதியாக உருக்கமான செய்தி ஒன்றை தெரிவித்துள்ளார்.

குரல் செய்தியாக பதிவு செய்யப்பட்டிருந்த ரெய்ஹெனே ஜப்பாரியின் செய்தியில்,

அன்புள்ள ஷோலே, நான் எனது வாழ்க்கையின் இறுதி பக்கத்தை அடைந்து விட்டேன் என்பதை நீயாகவே ஏன்எனக்கு தெரிவிக்கவில்லை. இந்த விடயம் எனக்கு தெரியவேண்டுமென உனக்கு தோன்றவில்லையா? நீ சோகமாக இருப்பது என்னை எவ்வளவு வெட்கப்பட செய்கிறது என்பது உனக்கு தெரியுமா?

அன்று இரவு நான் கொல்லப்பட்டிருக்க வேண்டும். என் னுடைய உடல் இந்த நகரத்தின் ஏதோ ஒரு ஓரத்தில் வீசப்பட்டிருக்கும். நானும் கற்பழிக்கப்பட்டேன் என உனக்கு தெரிந்திருக்கும். என்னை கற்பழித்தவனை கண்டுபிடிக்க முடியாமலேயே போயிருக்கும். ஏனென்றால் நம்மிடம் இல்லாத பலமும், பணமும் அவர்களிடம் உள்ளதே. அதன்பின் இதை நினைத்து நீ அவமானப்பட்டு சில ஆண்டுகள் கழித்து இறந்து போயிருப்பாய்.

ஆனால், இப்போது கதை மாறியுள்ளது. என் உடல் வீதியோரத்தில் வீசப்படவில்லை. சிறை கல்லறையில் அதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் கொசுவை கூட கொன்றதில்லை. கரப்பான்பூச்சிகளை மெதுவாகத் தான் அகற்றியிருக்கிறேன். இப்போது நான் கொலையாளியாக இங்கு நிற்கிறேன்.

எனக்காக நீ அழவேண்டாம், எனக்காக நீ ஒன்று செய்ய வேண்டும். நான் மண்ணில் அழுகிப்போக விரும்பவில்லை. எனது கண்களோ, இதயமோ வெறும் தூசியாக மாறவேண்டாம். நான் தூக்கிலிடப்பட்டதற்கு பின் எனது உடலில் இருந்து பிறருக்கு உபயோகப்படும் அனைத்து உறுப்புகளையும் அகற்றி அதனை தேவைப்படுபவர்களுக்கு பரிசாக அளித்துவிடு. என் உடலில் இருந்து அகற்றப்பட்ட உறுப்புகளை பெற்றவர்களுக்கு நான் யார் என்பதோ, என் பெயரோ எதுவும் தெரியவேண்டாம். அவர்கள் எனக்கு பூச்செண்டு தரவும் வேண்டாம், எனக்காக பிரார்த்தனை செய்யவும் வேண்டாம்.

நான் எனது இதயத்தின் ஆழத்திலிருந்து சொல்கிறேன், எனக்கு கல்லறை வேண்டாம். எனக்காக நீ அங்கு வந்து வேதனைப்பட்டு அழ தேவையில்லை. என்னுடைய கடினமான நாட்களை மறந்து விட முடிந்த வரை முயற்சி செய். என்னை காற்று எடுத்து செல்ல விட்டுவிடு.

இவ்வாறு ரெய்ஹெனே ஜப்பாரி அவரது தாயிடம் பகிர்ந்துகொண்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

# இந்தியா-வியட்நாம் ஒப்பந்தத்திற்கு சீனா எதிர்ப்பு

தென் சீனக்கடலில் துரப்பணப் பணி மேற்கொள்வது குறித்து இந்தியாவுக்கும், வியட்நாமுக்கும் இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒப்பந்தம் கையெழுத்தானது குறித்து சீனா தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹாங் லேய் கூறியதாவது,

இந்தியாவும், வியட்நாமும் இணைந்து தென் சீனக் கடலில் உள்ள எண்ணெய்க் கிணறுகளில் துரப்பணப் பணிகள் மேற்கொள்ளும் விவகாரத்தைப் பொறுத்த வரை, எங்கள் நிலைப்பாட்டில் நாங்கள் தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளோம்.

நான்ஷா தீவுகள், சீனாவுக்குச் சொந்தமானவை. அந்தத் தீவில் சீனாவுக்கு உள்ள இறையாண்மையைக் குலைக்கும் வகையில், தென் சீனக் கடலில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக் கூடாது.

தற்போது தென் சீன கடல் பகுதியில் அமைதி நிலவி வருகிறது. இந்த அமைதியைத் தொடர்ந்து பேணி காக்கும் வகையில் அனைத்து நாடுகளும் நடந்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தென் சீனக் கடல் பகுதியில் அமைந்துள்ள அனைத்து தீவுகளுக்கும் சீனா உரிமை கோரி வருகிறது.

இதன் காரணமாக, வியட நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருணை, தைவான் ஆகிய நாடுகளுக்கும், சீனாவுக்கும் நீண்ட காலமாக பிரச்சினை நிலவி வருகிறது.

இந்நிலையில், சீனாவுக்கும், வியட்நாமுக்கும் இடையில் பதற்றத்தை ஏற்படுத்தும் விவகாரமாக எண்ணெய்த் துரப்பண விவகாரம் உருவெடுத்துள்ளது. கடந்த மே மாதம் தென் சீனக் கடல் பகுதியில் எண்ணெய்த் துரப்பணப் பணிகள் மேற்கொள்ள சீனா முயற்சி செய்த போது, அதற்கு வியட்நாம் கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

துரப்பணப் பணியை மேற்கொள்ள வந்த சீனக் கப்பல்கள் மீது வியட்நாம் கப்பல்கள் மோதின. பதிலுக்கு சீனக் கப்பல்களும் வியட்நாம் கப்பல்கள் மீது மோதின.

இந்த மோதல் சம்ப வங்கள் பல நாட்களுக்கு நீடித்தன. அதன் தொடர்ச்சியாக, சீனாவுக்கு எதிராக வியட்நாமில் நடைபெற்ற கலவரத்தில், சீனர்கள் சிலர் உயிரிழுந்தனர். இந்தச் சூழலில், எண்ணெய்த் துரப்பணம் தொடர்பான இந்திய - வியட்நாம் ஒப்பந்தத்துக்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரைகள் இன்மையால் கால்நடைகளுக்கு பெரும் பாதிப்பு

## பிரேரணை கொண்டு வந்தார் ரவிகரன்

மேய்ச்சல் தரைநிலங்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தால் கால்நடைகள் பாதிக்கப்படுகின்றமை மற்றும் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் தமிழ் மீனவர்களுக்கு கரவலை அனுமதிப் பத்திரங்கள் வழங்க வேண்டும்




ஆகிய இரு பிரரேரணைகளையும் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் சமர்ப்பித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் 18 ஆவது அமர்விலேயே மேற்படி பிரேரணைகளை அவர் சமர்ப்பித்தார்.

அப்பிரேரணைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பிரேரணைகள் வருமாறு,

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேய்ச்சல் தரைக்கான நிலங்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தால் கால்நடைகள்பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் பொருத்தமான இடங்களில் மேய்ச்சல் தரைகளை ஒதுக்கீடு செய்து கால்நடைகளை காப்பாற்ற வேண்டுமென மாகாணக் காணி ஆணையாளர் ஊடாக காணி ஆணையாளரை இச்சபை கோருகின்றது.

1984 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் இடப்பெயர்வின் பின் கொக்கிளாய் பகுதியிலுள்ள கரவலைப்பாடுகளில் சிங்கள மீனவர்கள் தொழில் செய்து வருகின்றனர்.

அவர்களுக்கு கரவலைப் பாடுகளுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு விட்டது. இதேசமயம் முள்ளிவாய்க்கால் பகுதியில் கரவலைத் தொழில் செய்துவரும் தமிழ் மீனவர்களுக்கு இன்றுவரை அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை.

எனவே முள்ளிவாய்க்கால் பகுதியில் கரவலைத் தொழில் செய்யும் எட்டு மீனவர்களுக்கும் அப்பாடுகளுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டுமென கடற்றொழில் நீரியல் வள அமைச்சினை இச்சபை கோருகின்றது என அப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

## தொடர் மழையால் வவுனியாவில் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம்

(குருமன்காடு)

தொடர்ச்சியாக மழை பெய்து வந்தால் வவுனியாவின் சில பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய அபாயமுள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகின்றது. இந்த நிலை நீடிக்கும் பட்சத்தில் தாழ் நிலப்பரப்புக்கள் மற்றும் புனரமைக்கப்படாத குளங்களை அண்டிய பகுதிகள் என்பவற்றில் வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய நிலையுள்ளது.

இதனால் வெள்ள அனர்த்தம் தொடர்பான விழிப்பூட்டல் மற்றும் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆசிகுளம், வவுனியா சிங்கள பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அவுசகப்பிட்டிய ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வெள்ள அபாயம் தொடர்பான விழிப்பூட்டல் மற்றும் ஒத்திகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (அ-250)

## ஏற்று நீர்ப்பாசன தொகுதியை விரைவில் புனரமைத்து தாருங்கள்

### விவசாயிகள் கோரிக்கை



மாங்குளம்பழையகொலனி பகுதியில் அமைக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத்தினூடான கிணற்றுடன் கூடிய நீர்ப்பாசன தொகுதி முற்றாக அழிவடைந்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளார் மேற்படி நீர்ப்பாசன திட்டம் 1948 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் மக்கள் குடியமர்த்தப்பட்டவேளை மக்களின் வாழ்வாதார உயர்ச்சிக்காக அமைக்கப்பட்டது எனவும்சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த கால வன்னி யுத்தம் காரணமாக அந்த நீர்ப்பாசன தொகுதியின் இயந்திரங்கள் மற்றும் நீர்க்குழாய்கள் என்பன முற்றாக அழிவடைந்துள்ளன. இப்பகுதி மக்கள் கடந்த 2010ஆம் ஆண்டு மீள் குடியமர்த்தப்பட்ட நிலையிலும் இவ் ஏற்று நீர்ப்பாசன தொகுதி புனரமைத்து கொடுக்கப்படவில்லை. இதனை புனரமைத்து ஏற்று நீர்ப்பாசன திட்டத்தை ஆரம்பிக்குமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கிணறானது எந்த வரட்சியின் போதும் வற்றுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏற்று நீர்ப்பாசனம் முற்றாக செயலிழந்த நிலையில் விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரத்தை பயன்படுத்தி சிறிய குழாய் மூலம் நீர்ப்பாய்ச்சி விவசாயம் செய்து வருகின்றனர். இவ் ஏற்று நீர்ப்பாசனத்தை ஆரம்பித்தால் 20 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்ய முடியுமெனவும் 20 பயனாளிகள்பயன் பெறுவரெனவும் சுட்டிக் காட்டப்படுகிறது. எனவே இந்த ஏற்று நீர்ப்பாசனதொகுதியைபுனரமை த்து தமது பிரதான வாழ்வாதார தொழிலாகிய விவசாயத்தைமேம் படுத்த உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-281)

## விநாடிவினா போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இடையிலான தகவல் தெழில்நுட்ப பாடத்திற்கான விநாடிவினா போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி மு/மாங் குளம் மகாவித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

எனவே வலய மட்ட ரீதியில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பாடசாலை அதிபர்கள் மாணவர்களை போட்டியில் பங்குகொள்வதற்கு ஒழுங்குபடுத்தி கொடுப்பதுடன் போட்டிக்குதகவல்தெழில்நுட்ப பாட ஆசிரியர்களுடன் மாணவர்களை அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-15)

## விவசாயிகளுக்கு ஓர் அறிவித்தல்

(மல்லாவி)

மாங்குளம் மற்றும் மல்லாவி பொலிஸார் பொதுமக்களுக்கானஅறிவித்தல்ஒன்றை விடுத்துள்ளனர்.

ஏ-9 வீதி உட்பட ஏனைய ஊர்களுக்குச் செல்லும் காப்பெற்தார் கலவை இடப்பட்ட வீதிகளில் விவசாய நடவடிக்கைகளுக்காக இரு சக்கர உழவியந்திரம் மற்றும் உழவியந்திரத்தில் உழவு கலப்பைகள் மற்றும் இதனோடு தொடர்புடைய சில்லுகளுக்கு மேலதிகமாக பூட்டப்படும் இரும்புச் சில்லு எதனையும் பூட்டிய நிலையில் பயணிக்க வேண்டாமெனவும் அவ்வாறு செல்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு உழவியந்திரங்கள் பயணிக்கின்றபோது உழவியந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள கலப்பைகளில் இணைப்பு விடுபட்ட நிலையில் வீதியில் விழும் போது வீதி சேதமடைகின்றது.

இதனால் அவ் வீதியை மீள்திருத்தம் செய்ய பல இலட்சம் ரூபாய்கள் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பயணிக்கும் உழவியந்திரத்தின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி வீதிகளை பயன்படுத்தி விவசாய நிலங்களுக்கு செல்வோர் உழவு கலப்பைகளையும் ஏனைய உபகரணங்களையும் இழுவை பெட்டியில் ஏற்றிச் சென்று பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் களது அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-15)

## கிளிநொச்சி பொதுச் சந்தையில் பாவனைக்கு உதவாத மீன்கள்

### பழுதடைந்த மீன்கள் ஏற்றிச் செல்லப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சுகாதார பரிசோதகரும் கரைச்சிப் பிரதேசசபை பணியாளர்களும் கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்றுக்காலை ஐஸ்மீன் பரிசோதனையில் ஈடுபட்டதுடன் விற்பனைக்கு உதவாத மீன்களை பிரதேச சபையின் வாகனத்தில் ஏற்றியுள்ளனர்.

இதனால் பொதுச் சுகாதார பரிசோதகர், பிரதேச சபை பணியாளர் ஆகியோருடன் மீன் வியாபாரிகள் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

மீன்களை சந்தைக்குள் வைத்து ஐஸ்போட வேண்டாம் என்றும் மீன்களை வெளியில் வைத்து ஐஸ்போட்டு பதப்படுத்துமாறும் சந்தைக்குள் வைத்து ஐஸ்போடுவதால் பழுதடைந்த மீன்களையும் சில வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். இது மக்களின் உடல் நலத்திற்கு கேடானது எனவும் பொதுச் சுகாதார பரி சோதகர் கூறினார்.

ஐஸ்போடப்பட்ட மீன்களை பரிசோதனை செய்யப்பட்ட பின்பே விற்பனைக்கு அனுமதிப்போம் எனவும் கூறினார்.

ஆயினும் மீன் வியாபாரிகள் சந்தைக்குள் வைத்து மீன்களுக்கு ஐஸ்போட அனுமதிக்குமாறு கோரியதுடன் வெளியிலிருந்து ஐஸ்போட்ட மீன்களை கொண்டு வருவதற்கு தமக்கு வாகன வசதியில்லை எனவாதிட்டனர். இதற்கு பொதுச் சுகாதார பரிசோதகர் மறுப்பு தெரிவிக்கவே அவர்கள் தமது மீன் கடைகளை பூட்டி எதிர்ப்பு தெரிவித்தனர்.

இவ் எதிர்ப்பு நடவடிக்கையின் போது மு.ப 11 மணியளவில் அங்கு வந்த கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி கொண்டு வந்த மீன்களை இன்று விற்பனை செய்யுமாறும் பின்னர் இதற்கான முடிவுகளை எடுப்போம் எனவும் கூறினார். இதன்னையடுத்து மீன் வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபை தவிசாளரிடம் தொடர்பு கொண்டுகேட்ட போது மீன்களை நீண்ட நாட்களாக ஐஸ்போட்டு பெட்டிகளில் வைப்பதனால் ஐஸ் தண்ணீராகி மீன்களுக்குள் புழு வருவதை அவதானிக்க முடிந்தது. இதனால் பொதுமக்கள் பாதிப்படைவதுடன் இது சுகாதாரத்திற்கும் கேடானது. இதனால் தான் ஐஸ் போட்ட மீன்களை தாம் முற்றாக தடை செய்யவுள்ளோம் என்றார். (அ-271)

## பற் சுகாதார திட்டம் முன்னெடுக்கப்பட்டது

### பற்பசை, பற்தூரிகை என்பன வழங்கப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தினால் கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு பற் சுகாதார திட்டத்தின் மூலம் பற்பசை மற்றும் பற்தூரிகைகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வி வளர்ச்சி அறக் கட்டளை நிறுவனத்தினால் கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 76 பாடசாலைகளின் தரம் ஒன்று மாணவர்களுக்கே பற் சுகாதார செயற்றிட்டத்தின் மூலம் 247 பற்பசைகளும், 2 ஆயிரத்து 487 பற்தூரிகைகளும் கிளி/ மத்திய கல்லூரி ஆரம்ப வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இவ் அறக் கட்டளை நிறுவனத்தினால் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் 424 மாணவர்களுக்கு கடனுதவி திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை முன்னிலை

பால் சமத்துவ இடைவெளி பட்டியலில் இலங்கை ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முதல் 10 இங்களுக்குள் வரிசைப்டுததப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கை 79 புள்ளிகளுடன் 10ஆம இடத்தை வகிக்கிறது. இந்தியா 19வது இடத்தை பெற்றுள்ளது. 2014 ஆம் ஆணடுக்கான ஆண் பெண் இடையிலான பால் சமத்துவ இடைவெளி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்கீழ் உலகில் உள்ள 144 நாடுகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்பு, அரசியல் போன்றவற்றில் தரப்படும் இடங்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இதன்படி பங்களாதேஷ் பெண்களுக்கான முன்னுரிமையின் அடிப்படையில் 8 ஆவது இடத்தை வகிக்கிறது.

உலகளாவிய ரீதியில் ஐஸ்லாந்து முதலாம் இடத்தையும் பின்லாந்து இரண்டாம் இடத்தையும் நோர்வே மூன்றாம் இடத்தையும் சுவீடன், டென்மார்க் என்பன நான்காம் ஐந்தாம் இடங்களையும், கனடா 19ஆவதுஇடத்தையும் அமெரிக்கா 20 ஆவது இடத்தையும் பிரித்தானியா 26 இடத்தையும்பிடித்துள்ளன. இலங்கை உலகளாவிய ரீதியில் 79 இடத்தையும் இந்தியா 114 இடத்தையும் வகிக்கின்றன. (இ-3)

## அநுராதபுர நகரத்தில் கேளிக்கை அரங்குகள்

### ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

புனித நகரான அநுராதபுரத்தில் மதத்தை இழிவுப்படுத்தும் வகையில் சம்பவங்கள் இடம்பெறுவதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுர மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹரிசன் இது தொடர்பான தகவலை வெளியிட்டார்.

ஜெயஸ்ரீ மஹாபோதி மற்றும் ருவான்வெலிசாய ஆகிய விஹாரைகள் அமைந்துள்ள அநுதராபுரம் புனித நகரப் பகுதியில், இரவுநேர களியாட்ட அரங்குகள் செயற்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் இதனை கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் எந்தத்திட்டமும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். (இ-5)

# தமிழ் கூட்டமைப்பு விரைவில் தீர்மானம் எடுக்க வேண்டும்

### அமைச்சர் அமுனுகம கோரிக்கை

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதனால்தான் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்து அதில் பங்கெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் பங்கெடுக்குமாறு வலியுறுத்துகின்றபோதும் கூட்டமைப்பு தடுமாறிக் கொண்டிருக்கின்றது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். வெளியில் இருக்காமல் உள்ளே சென்று தீர்வைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றே இந்திய பிரதமர் மோடியும் கூறியுள்ளார். ஆனால்கூட்டமைப்பு முடிவெடுக்காமல் உள்ளது என்றும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட சர்வதேச வர்த்தக ஒத்துழைப்பு குறித்த சிரேஷ்ட அமைச்சரும் நிதி பிரதி அமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தத்தின்பின்னர் பொருளாதார அபிவிருத்தித் துறையில் நாடு பாரிய வளர்ச்சிய அடைந்துள்ளதாக கூறப்படுகின்ற நிலையில் அரசியல் தீர்வு மற்றும் நல்லிணக்க விடயத்தில் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளதா? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கே அமைச்சர் மேற்கண்ட பதிலை வெளியிட்டார்.

**தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல**

அரசாங்கம் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படவில்லை. தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் நடத்தப்படவுமில்லை. மாறாகபுலிப் பயங்கரவாதிகளுக்கு எதிராகவே யுத்தம் நடத்தப்பட்டது. யுத்த காலத்தில் கூட வடக்கு, கிழக்கில் ஆசிரியர்கள், கிராம சேவகர்கள் உள்ளிட்ட அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் சம்பளம்வழங்கியது.(இ)

## ஜனாதிபதி தேர்தலும் பாப்பரசர் விஜயமும்

### ஒரே காலப்பகுதியிலில்லை

எதிர்வரும் ஜனவரி மாதம் 13 முதல் 15ஆம் திகதிவரையான பாப்பரசர் பிரான்ஸிஸின் இலங்கைக்கான விஜயமும் ஜனவரி மாதம் எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலும் ஒரேசமயத்தில் நடைபெறப் போவதில்லையென சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாப்பரசரின் பயண நிகழ்ச்சிநிரல் தயாரிப்புத் தொடர்பில் கொழும்புக்கும் வத்திக்கானுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதாகவும் அவர் கூறினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில்நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், ஜனவரி மாதம் தேர்தல் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும், இதற்கான திகதி இன்னமும் குறிக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார். (இ-5)


# கடன்களை திருப்பி செலுத்த வியூகம் அமைக்க வேண்டும்

**இலங்கை தற்போது மத்தியதர வருமானத்தை பெறும் தளமாக மாறியுள்ளதால் அபிவிருத்திகளுக்கு கடன்களை பெற்றுக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே அபிவிருத்திகளுக்காக பெறும் கடன்களை திருப்பி செலுத்துவதற்கான வியூகங்களை எமது பொருளாதாரத் தீர்மானங்களில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்று சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போதே சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண இவ்வாறு தெரிவித்தார்.**

ஊழியர்களுக்கான சேமலாபு நிதியத்திற்கு தொழில் வழங்குநர் இரண்டு வீதம் பங்களிப்பு செய்ய வேண்டுமென வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி முன்மொழிந்திருப்பதை வரவேற்கின்றோம். அதேபோன்று ஜுலை வேலை நிறுத்தக்காரர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஜனாதிபதிக்கு எமது தொழிற்சங்கம் விருது வழங்கி கௌரவித்தது.

## திஸ்ஸ விதாரண கூறுகிறார்



மக்களுக்கு பெருமளவில் சலுகைகள், அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு உட்பட தனியார் துறையினருக்கும் சம்பள உயர்வு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நாட்டில் விவசாயிகள், மீனவர்கள், சாதாரண தொழிலாளர்கள் உட்பட அனைத்து தேவைகளையும் நிறைவேற்றும் விதத்தில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, மகிழ்ச்சியளிக்கின்றது.

மத்திய தர வருமானம் பெறும் நாடாக மாறியுள்ளதால் அபிவிருத்திகளுக்காக கடன் பெறும்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்வாறு பெறப்படும் கடன்களை திருப்பி செலுத்துவதற்கான வியூகங்களை வகுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# பௌத்த சாசனத்தின் அடிப்படையில் அரசியல் யாப்பு உருவாக வேண்டும்

### ஞானசார தேரர் வலியுறுத்தல்

(கொழும்பு)

பௌத்த சாசனத்தின் அடிப்படையில் அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டை சிறந்த பௌத்த தலைவர் ஆட்சி செய்ய வேண்டும் என்பதே இந்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு. சுயநல வாதியாகவும் பிரிவினைக்கு துணை போகும் தலைவரை விடவும் மக்களை காப்பாற்றும் தலைவரை உருவாக்க வேண்டும் என்பதே பௌத்த தேரர்களின் ஆசை. இவை எதுவும் நடக்காவிடின் காலம் வரும்போது நாமே களத்தில் இறங்குவோம் எனவும் ஞானசார தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சவாலான எதிரணித் தலைவர் இல்லையென்பது வெட்கப்பட வேண்டிய விடயம். பொது எதிரணி தயாராகும் வரையிலேயே நாம் பொறுமை காக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுபலசேனா பௌத்த அமைப்பினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டிற்கு சிறந்த பௌத்த தலைவர் ஒருவரை உருவாக்க வேண்டும். பௌத்த சிங்கள தர்மம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையே பௌத்த மகாநாயக்க தேரர்கள் விரும்புவார்கள். தேரர்கள் எப்போதும் தம்மை இந்த நாட்டின் தலைவராக மாற்றிக் கொள்ள நினைப்பதில்லை.

அதேபோல் தம்மால் இந்த நாட்டிற்கு சிறந்த தலைவனை உருவாக்கிவிட வேண்டும் என விரும்புவார்கள். எமது விருப்பமும் அதுவே. எமது விருப்பம் மட்டுமன்றி இந்நாட்டின் பௌத்த சிங்கள மக்களின் விருப்பமும் அதுவே.

மேலும் பொது எதிரணி சவாலான எதிரணித் தலைவர் உருவாகி அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் மட்டுமே தேர்தல் சவாலாக அமையும். காலம் கடந்து ஞானம் வந்த இவர்கள் தற்போதாவது சரியான பாதையினை தெரிவு செய்ய வேண்டும்.

அரசியல் அமைப்பில் சிறுசிறு மாற்றங்களை செய்வதனால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. அத்திவாரம் பலமாக அமைய வேண்டும். பௌத்த சாசனத்தின் அடிப்படையில் அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும். எனவே இவ் விடயங்களில் அனைவரினதும் பங்கு அமைய வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம்.

அதேபோல் எதிரணி தயாராகும் வரையில் எமது செயற்பாடுகளும் காத்திருக்கும். எமக்கென்று சில கொள்கைத்திட்டங்கள் உள்ளன. அதற்கு அமைய ஜனாதிபதி தேர்தலின் பொது எதிரணித் தலைவர் யார் என்பதைப் பொறுத்து யாரை நாம் ஆதரிப்போம் அல்லது நாம் எவ்வாறு தேர்தலில் களமிறங்குவோம் என்பதை தீர்மானிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

## அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக மீனவர் போர்க்கொடி தூக்கினர்

இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் மாலை மாத்தறையில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை கடலில் மீன்பிடிப்பதற்கு வெளிநாட்டு கப்பல்களுக்கு அனுமதியளித்தமைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்தநிலையில் இலங்கை கடலில் மீன்பிடிக்க வெளிநாடுகளுக்கு அனுமதிப்பதன் மூலம் அமைச்சர் சேனாரத்ன, தரகுப்பணம் பெற்றுக்கொள்வதாக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் குற்றம் சுமத்தினர்.

மாத்தறை பிரதான பஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 1500 மீனவர்கள் வரை பங்கேற்றுள்ளனர்.(இ)

# உறுதிப்படுத்த ஆதாரமில்லை

மன்னன் இராவணனிடம் விமானங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் இருந்ததாக தெரிவிக்கப்படுவதை உறுதி செய்யும் சாட்சியங்கள் இல்லை என்று இலங்கையின் அகழ்வாராட்சி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது திணைக்களத்தின் தலைவர் செனரத் திஸாநாயக்க இந்த தகவலை வெளியிட்டார்.

இராவணன் 300ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அவரிடம் விமானங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் இருந்ததாகவும் கதைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதனை உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியங்கள் எதனையும் கண்டறியமுடியவில்லை என்று திஸாநாயக்க தெரிவித்தார்.

கம்பராமாயண கதைகளின்படி இராவணன் புஷ்பக விமானத்தை பயன்படுத்தியே சீதையை கடத்திச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில் இனிமை, கொள்கையில் தெளிவு,
செயலில் உறுதி என்ற மூன்றும் உள்ளவர்
எதையும் சாதிக்கலாம். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடமாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி பணிகள்

வட மாகாண சபை உறுப்பினர்களின பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம், சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக பல விதமான அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. உறுப்பினர் வை.தவநாதனுடைய 2 இலட்சம் ரூபாய் நிதி மற்றும் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியுடன் கிளிநொச்சி வன்னேரிக் குளத்திலுள்ள யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த இல்லம் யுத்தத்தால் சேதமடைந்து மீளவும் இயங்க முடியாத நிலையில் இருந்து வருகின்றது. இதேவேளை, வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரனின் 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவியின் கீழ், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தேவிபுரம் முதியோர் சங்கத்திற்கு ஒலிபெருக்கி கொள்வனவு, உறுப்பினர் மேரி கமலா குணசீலனின் 25 ஆயிரம் ரூபாய் நிதியில் மேற்படி சங்கத்திற்கு தளபாடங்கள் கொள்வனவு, உறுப்பினர் வீ.கனகசுந்தர சுவாமியின் 25 ஆயிரம் ரூபாய் நிதியில் சங்கத்தின் நுழைவாயில் ஆகியன புனரமைக்கப்படவுள்ளன. வட மாகாண சபை உறுப்பினர் ச.சிவமோகனின் ஒரு இலட்சம் ரூபாய் நிதியில், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மந்துவில் முதியோர் சங்க கட்டிடம், உறுப்பினர் சி.தியாகராஜாவின் 20 ஆயிரம் ரூபாய் நிதியில் நெடுங்கேணி மாற்றுத்திறனாளிகள் சங்க அலுவலகத்தின் மின் இணைப்பு, உறுப்பினர் தர்மபால செனவிரட்ணவின் 40 ஆயிரம் ரூபாய் நிதியில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மெனிக்பாம் முதியோர் சங்கத்தின் வேலி புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம், பிரதேச செயலாளர் பிரிவுகள் ஊடாக இப் பணி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சமூக சேவை அலுவலர்கள் ஆகியோரின் மேற்பார்வையின் முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ-2)

## பதினெட்டாவது அமர்வில் மொழியப்பட்ட குற்றச்சாட்டுக்கள்

வடக்கு மாகாண சபையின் 18 ஆவது அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் ஆற்றிய உரை அதிர்ச்சி தருவதாகும்.

வடக்கு மாகாண சபையின் செயற்பாட்டில் திருப்தியில்லை என்பது அவரின் குற்றச்சாட்டாக இருந்ததுடன், மாவட்ட ரீதியான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினரான அன்ரனி ஜெகநாதன் ஆற்றிய உரையைப் பார்க்கும் போது ஒரு எதிரணி உறுப்பினர் ஆற்றிய உரை போல இருந்தது. எனினும் ஆளும் கட்சியில் அங்கத்துவம் பெற்றிருந்தாலும் அரசு விடும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதென்பதற்கு ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற வகைமைப்பாடு தேவையில்லை.

அந்த வகையில், வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கூறிய விடயங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதிலும் மாவட்ட ரீதியில் பாகுபாடு காட்டப்படுகின்றது என்ற அவரின் குற்றச்சாட்டு, வடக்கு மாகாணத்தில் பிரதேசவாதத்தை தலைதூக்க வைக்கும்.

மிகப் பெரிய போராட்ட அமைப்பாக இருந்த விடுதலைப் புலிகளின் தோல்வி என்பது கூட, பிரதேசவாதம் என்ற விதைப்பால் ஏற்பட்டதாகும். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த முக்கிய தலைவர்களின் பெயர்களைப் பட்டியல்படுத்தி இவர்களில் எவரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்று கருணா குற்றம் சாட்டியபோது கிழக்கு மாகாணத்தில் அதற்கு ஓரளவு ஆதரவு இருக்கவே செய்தது.

இதுபோல வடக்கு மாகாண சபையிலும் மாவட்ட ரீதியிலான பிரதேசவாதத்தை எடுத்துக் காட்டக் கூடியதான நியாயப்பாடுகளை எவரும் வளர்த்து விடாதீர்கள். அதேசமயம் கட்சி சார்ந்த குற்றச்சாட்டுக்களை தத்தம் கட்சிகளில் கூறி தீர்வு காண்பதும் பொருத்துடையது.

எதுவாயினும் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் மாகாண அரசின் குறைபாடுகளைக் குறித்துக் காட்டியபோது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா பார்வையாளர் பக்கத்தில் அமர்ந்திருந்து செவிமடுத்துக் கொண்டிருந்தார்.

எனவே வடக்கு மாகாண சபையின் இயங்கு நிலை திறம்பட அமைவதற்கு, மாகாண சபை அமர்வுகளுக்கு வெளியாக கூட்டங்களும் ஆலோசனைகளும் நடத்தப்பட வேண்டும் என்பதும் மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்களின் வேலைத் திட்டங்கள் தொடர்பில் மீளாய்வுகள் செய்யப்படுவதும் அவசியம் என்றமுடிவை அவர் எடுத்திருப்பார் என்று நம்பலாம்.

எதுவாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கிடையில் ஒருமைப்பாடு இல்லாமல் இருப்பதைக் காணமுடிகிறது. வடக்கு மாகாண சபையைக் கண்காணிப்புச் செய்வதும் அவர்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதுமே தங்களின் கடமை என்பது போல கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைமை போகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக் கூடிய கடமை, அவர்கள் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் என்பன நிறைவேற்றப்படுகின்றனவா? என்பது குறித்தும் மக்கள் கவனம் செலுத்தி வருகின்றனர் என்ற உண்மையை எவரும் மறந்துவிடலாகாது.

எனவே, வடக்கு மாகாண சபையின் அமர்வுகள் குற்றச்சாட்டின் அரங்காகவும் தீர்மானங்கள் நிறைவேற்றும் இடமாகவும் இருக்காமல்; வட பகுதி மக்களின் அபிவிருத்தி, வாழ்வாதாரம் குறித்த திட்டங்களைத் தீட்டுவதும் அதை செயற்படுத்துவதுமாக இருக்க வேண்டும்.

## இனப்பிரச்சினை இருப்பதை வேட்பாளர் ஏற்பது அவசியம்

**மனோ கணேசன் தெரிவிப்பு**

ஆளுகின்ற அரசுக் கூட்டணியின் பொது வேட்பாளர் தானே என ஜனாதிபதி மகிந்த கூறுகிறார். அதுபோல் எதிரணியின் பொது வேட்பாளர் ஒருவரும் உருவாகி வருகிறார்.

இந்த இரண்டு வேட்பாளர்களை முன்னிறுத்தும் இரண்டு பிரதான கட்சிகளும், இந்த நாட்டில் நிலவும் விலைவாசி, சம்பள உயர்வு, ஊழல், மாணவர் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற தீர்ப்பு என்ற அனைத்து பிரச்சினைகளையும் பற்றியும் பேசுகின்றன. இந்த பிரச்சினைகளுடன் இந்த நாட்டில் தீர்க்கப்படாத இனப் பிரச்சினை ஒன்று உள்ளது என்பதையும் இவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இனப் பிரச்சினை தீர்வுக்கான முழுமையான திட்டத்தையும், உடன்படிக்கையும் தம் தேர்தல் அறிக்கைகளில் முன்வையுங்கள் என நான் இவர்களிடம் கோரவில்லை.

இப்படி கோரி, இங்குள்ள இனவாதிகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் பொய் பிரசாரம் செய்ய இடமளிக்க போவதில்ல. ஆனால், அதற்காக இனப் பிரச்சினையே இல்லை என்பது போல் நாடகமாடுவதை அனுமதிக்க முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன். தெரிவித்துள்ளார். அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த நாட்டில் தேசிய இனப்பிரச்சினை இருக்கின்றது. இந் நாட்டின் சிங்கள தலைவர்கள், தமிழ் தலைவர்களுடன் தொடர்ச்சியாக பேச்சுக்களை நடத்தினார்கள். அவற்றின் மூலம் பல ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்றைய ஜனாதிபதி மகிந்த கூட இப்படியான சர்வ கட்சி மாநாடு நடத்தினார். அதன்மூலம் ஓர் ஆவணம் உருவாக்கப்பட்டது. ஆகவே இல்லாத பிரச்சினை பற்றி பேச இவர்கள் முட்டாள்கள் அல்லர். இவர்களுடன் பேசிய தமிழ் தலைவர்களும் முட்டாள்கள் அல்லர். இந்த நாட்டில் தீர்க்கப்படாத இனப்பீரச்சினை ஒன்று இருப்பதை மறந்துவிட்ட நிலையிலேயே இன்று ஜனாதிபதித் தேர்தல் களம் உருவாகி வருகிறதா என்ற சந்தேகம் எழுகிறது. ஆட்சியில் உள்ள அரசாங்கம் நடைமுறையில் உள்ள மாகாண சபைகளுக்கு உயிரூட்டுவதை தவிர்த்து அவற்றின் அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதில் கவனம் செலுத்துகிறது. இந்த நேரத்தில் எதிரணியில் இனப்பிரச்சினையை பற்றி அறவே பேசாமல் இருந்து விட வேண்டும் என்ற மாதிரியான சிந்தனை நிலவுகிறது. கடந்த சில வாரங்களாக பல கலந்துரையாடல்களில் கலந்து கொண்டுள்ள என்னால் அவதானிக்க முடிகிறது. இனப்பிரச்சினை தீர்வு பற்றி பேசினால் அரசு தரப்பு அதை பயன்படுத்தி சிங்கள மக்களை தூண்டிவிட்டு விடும் என்று எச்சரிக்கை விடப்படுகிறது.

இதை தமிழ் கட்சிகள் உணராமல் இல்லை. பொது எதிரணி வேட்பாளரின் தேர்தல் அறிக்கையில் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான ஒட்டு மொத்த திட்டமும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

அதை நிறைவேற்று அதிகாரமுறைமையை ஒழித்துவிட்டு வரும் புதிய நாடாளுமன்ற அரசு பொறுப்பேற்க வேண்டும். ஆனால், அதற்காக தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்று இந்நாட்டில் இன்றளவும் தீர்க்கப்படாமல் இருக்கின்றது என்ற உண்மையை கூட ஏற்றுக்கொள்ளாமலும், கணக்கில எடுக்காமலும், எந்த ஒரு பொது வேட்பாளரும் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை எப்படி எதிர்பார்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

## முன்னறிவித்தல் இன்றி மின்சாரம் தடைப்படுகிறது.

**மக்கள் விசனம்**

வவுனியாவின் பல பகுதிகளிலும் முன்னறிவித்தல் இனறி மின்சாரம் தடைப்படுவதால் விரத காலங்களிலும் அலுவலக நேரங்களிலும் கடும் பாதிப்பு ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். வவுனியாவின், சாந்தசோலை, தம்பனைச்சோலை, நெளுக்குளம், தாண்டிக்குளம் எனப் பல பகுதிகளில் முன்னறிவித்தல் இன்றி அவ்வப்போது மின்சார தடை ஏற்படுகின்றது. இவ்வாறு தடைப்படும் சில நாட்களில் மாலை நேரங்களிலேயே மீளவும் வருவதாகவும் மக்கள் கூறுகின்றனர். இதன் காரணமாக எதிர்வரும் டிசம்பர் மாதம் க.பொ.த. சாதாரண பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள், மற் றும் அரச, தனியார் நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை மேற் கொள்ள முடியாது பாதிப்பை எதிர்நோக்குகின்றனர். (அ-250)



## சத்திய தரிசனம்

### கொடுப்பதில் மகிழ்ச்சி


❖ புத்தக அறிவு மேலோட்டமானது. அனுபவத்தின் மூலம் கிடைக்கும் அறிவு ஆழ்ந்த பயன் அளிக்கக்கூடியது.

❖ செய்வதை மட்டும் சொல்லுங்கள். சொன்னபடி நடந்து காட்டுங்கள்.

❖ மக்களின் சேவையே மகேசன் சேவை.

❖ உங்களை நீங்களே பிரபலப்படுத்திக் கொள்ள வேண்டாம். தகுதி இருக்குமிடம் நோக்கி புகழ் தானாகவே வரும்.

❖ பெறுவதைக் காட்டிலும் கொடுப்பதில் மகிழ்ச்சி அடையுங்கள். பிறருக்குக் கொடுத்து மகிழவே கடவுள் இரண்டு கைகளை வழங்கியிருக்கிறார்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வள்ளலார் அருளிய தவிர்க்கவேண்டிய சில பாவங்கள்

- நல்லதோர் மனதை நடுங்கச் செய்வது பாவம்
- வலிய வழக்கிட்டு மானம் கெடுப்பது பாவம்
- தானம் கொடுப்போரை தடுப்பது பாவம்
- மனமொத்த நட்பிற்கு வஞ்சகம் இழைப்பது பாவம்
- ஏழைகள் வயிறு எரியச் செய்வது பாவம்
- பசித்தோர் முகத்தை பாராதிருப்பது பாவம்
- கோள் சொல்லிக் குடும்பத்தைக் கலைப்பது பாவம்
- தாய் தந்தை மொழியைத் தட்டி நடப்பது பாவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களின் உதைபந்தாட்டம்
# இளவாலை ஹென்றியரசர் வெற்றி



புனிதர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் Battle of the Saints இளவாலை ஹென்றியரசர் கல்லூரி யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றது.

இப் போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நான்கு பிரிவுகளில் இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் இரு பிரிவுகளில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்று இவ் வருடத்திற்கான வெற்றியை தமதாக்கியது.

முதலாவதாக இடம்பெற்ற 14 வயது பிரிவினரிற்கான போட்டியில் 2-0என்ற கோல் கணக்கில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்றது.

16மற்றும் 18 வயதுப் பிரிவினரிற்கான ஆட்டம் சமநிலையில் நிறைவுபெற்றது.

20வயது பிரிவினரிற்கான போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் அடிப்படையில் இரு பிரிவுகளில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்று இவ் வருடத்திற்கான வெற்றியை தமதாக்கியது. (க)

# யா/ நெல்லியடி மத்திய கல்லூரி மாணவி துப்பாக்கிசுடும் பயிற்றுவிப்பாளராக
## அமெரிக்கா செல்லத் தெரிவு



இலங்கைப் பாடசாலைகள் துப்பாக்கிசுடும் விளையாட்டுச் சங்கத்தினால் நாடளாவியரீதியில் நடத்தப்பட்டபோட்டித்தொடரில் அகல இலங்கைரீதியில் 2ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட யா/நெல்லியடிமத்தியகல்லூரி மாணவி செல்வி.தயானி ஸ்ரீசிதம்பரலிங்கம் துப்பாக்கிசுடும் பயிற்றுவிப்பாளர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு மேலதிகபயிற்சிகளைப் பெறுவதற்காக ஐக்கிய அமெரிக்கா செல்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தேசியரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 6 பேர் கொண்டபயிற்றுவிப்புாளர் அணியில் இடம்பெறும் ஒரேயொருதமிழ் மாணவவீராங்கனை இவராவார். எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ளஆசிய இளைஞர் விளையாட்டில் பங்குபற்றவுள்ள தேசியஅணி வீரர்களுக்கான பயிற்றுவிப்பாளராக பணியாற்றுவதற்காக இவருக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவரும் இன்னொருமாணவ வீராங்கனையான செல்வி. பிரதீபா குமாரவேல் என்பவரும் எதிர்வரும் நவம்பர் மாதம் போலந்துநாட்டில் நடைபெறவுள்ள பாடசாலை மட்ட சர்வதேச துப்பாக்கிசுடும் போட்டியில் இலங்கை அணிசார்பில் பங்குகொள்ளவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாணவிகளது சாதனைகளால் நெல்லியடி மத்திய கல்லூரிச் சமூகம் மகிழ்வும் பெருமிதமும் கொள்கின்றது. (க-20)

# விபுலானந்தன் ஞாபகார்த்த
# கூடைப்பந்தாட்ட போட்டி



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட் அரையிறுதிப் போட்டியில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப் பந்தாட்ட சுற்றுப்போட்டிகளை நடத்தி வருகின்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான அரையிறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மோதிக்கொண்டது.

விறு விறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 52 புள்ளிகளையும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 46 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (கு)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# கீர்த்திகன் ஞாபகார்த்த
# கூடைப்பந்தாட்ட போட்டி



கொக்குவில் இந்துக் கல்லூரியின் மறைந்த கூடைப்பந்தாட்ட வீரன் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைபந்தாட்ட போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட அணியின் ஏற்பாட்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டதிடலில் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இத் தொடரில் ஆண்கள் பிரிவில் 6 அணிகளும் பெண்கள் பிரிவில் 4 அணிகளும் பங்குகொள்கின்றன.

தொடரின் 3ஆம் இடத்திற்கான போட்டி நாளை 31ஆம் திகதியும் இறுதிப் போட்டி கார்த்திகை 1ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் ஆண்களுக்கான லீக்போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதியது.

ஆரம்பத்திலிருந்தே போட்டியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை முன்னிலை வகித்தது.

முதல் பாதியில் 30:22 என முன்னிலை வகித்த மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்தி 42:34 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை பெண்களுக்கான அரையிறுதிப் போட்டியும் இடம் பெற்றது.

இப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் மோதியது.

இப் போட்டியில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற போதும் இரண்டாவது பாதியில் ஆதிக்கம் செலுத்திய மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணி 35:16 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இதேவேளை பெண்களுக்கான போட்டியொன்றும் இடம்பெற்றது.

இப் போட்டியில் யாழ் இந்து மகளிர் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதியது.

இப் போட்டியில் ஆதிக்கம் செலுத்திய யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 29:10 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வென்றது. (க-23)

# யாழில் இடம் பெற்ற துடுப்பாட்ட போட்டியில்
# இலங்கை முன்னாள் அணி வீரர்கள் வெற்றி






(யாழ்ப்பாணம்)

யாழில் நடைபெற்ற இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரர்கள் அணிக்கும் வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த துடுப்பாட்ட அணிக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியில் இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரர்கள் அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

வடமாகாணத்தில்முதன்முறையாக யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் அமைக்கப்பட்ட புற்றரை துடுப்பாட்ட மைதானத்தை கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

இலங்கை துடுப்பாட்ட நிறுவனத்தின் நிதியுதவியுடனும் இராணுவத்தினரின் பங்களிப்புடனும் குறித்த மைதானம் அமைக்கப் பட்டுள்ளது.

மைதானம் கையளிக்கும் ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா. யாழ்.ஆயர் [illegible] சவுந்தரநாயகம் மற்றும் முன்னாள் இலங்கை துடுப்பாட்ட அணியின் வீரர்களான சனத்ஜெயசூரியா முத்தையா முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

மைதான கையளிப்பு நிகழ்வுக்கு பின்னர் இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரர்கள் அணிக்கும் வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த துடுப்பாட்ட அணிக்கும் இடையில் சிநேகபூர்வ போட்டி நடைபெற்றது.

குறித்த போட்டி 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட போட்டியாக முதலில் அறிவிக்கப்பட்டு இருந்த போதிலும் மழை காரணமாக 12 பந்து பரிமாற்றங்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த துடுப்பாட்ட அணி 12 பந்து பரிமாற்ற முடிவில் 92 ஓட்டங்களை பெற்று ஆறு இலக்குகளை இழந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரர்கள் அணி 11.2 பந்து பரிமாற்றத்தில் 95 ஓட்டங்களை பெற்று 5 இலக்குகளால் வெற்றியீட்டியது.

சனத் ஜெயசூரியா அதிரடியாக ஆடி நான்கு ஆறு ஓட்டம் உள்ளடங்கலாக 38 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரர்கள் அணியில் சனத்ஜெயசூரியா, முத்தையா முரளிதரன், உப்புல் சந்தன உள்ளிட்ட தேசிய வீரர்கள் இடம்பெற்று இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய மண் சரிவு...

பதுளை பிரதேசத்திலுள்ள கொஸ்லந்த பகுதியில் மீரியாபெத்த ஆற்று பள்ளத்தாக்குக்கு அண்மித்த ஏழு தோட்ட குடியிருப்பு (லயன்) களிலுள்ள சுமார் 100 வீடுகளும் ஆலயமொன்றும் வேறு சில கட்டிடங்களும் மண் சரிவு காரணமாக புதையுண்டுள்ளன.

தற்போது நிலவும் சீரற்றகால நிலை காரணமாக அந்த பகுதியில் மழை பெய்து வரும் நிலையில் மண் சரிவு அபாயம் குறித்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் ஏற்கெனவே குடியிருப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்தவர்கள் நேற்று காலை தமது உடைமைகளை எடுத்து வருவதற்காக சென்றிருந்த போதே இந்த மண்சரிவில் சிக்கிக் கொண்டதாக கூறப்படுகின்றது.

அந்த பகுதியில் வசித்த குடியிருப்பாளர்களில் அநேகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ள நிலையில் புதையுண்டவர்கள் தொடர்பில் சரியான தகவல்களை தற்போதைக்கு கூற முடியாதிருப்பதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

**அனைவரும் உயிரிழப்பு**

பதுளை மீரியா பெத்த மண் சரிவில் சிக்குண்ட வர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மண் சரிவில் சிக்குண்டவர்களை மீட்கும் நோக்கில் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எனினும், கடும் மழை மற்றும் பிரதேசத்தில் போதியளவு வெளிச்சம் இன்மையினால் மீட்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இன்றைய தினம் மீண்டும் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சுமார் ஐந்து கிலோ மீற்றர் வரையிலான பகுதி முழுவதுமாக மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

**ஜனாதிபதி அனுதாபம**

மீரியாபெத்த தோட்ட மண்சரிவில் உயிரழந்த மக்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்கல் மற்றும் மீட்பு பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளை பணித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின்நிலையை நேரில் கண்டறிய அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானை விமானம் மூலம் பதுளைக்கு அனுப்பி வைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். -(செ-11)

# இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து மும்பையை வென்றது சென்னை

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னையின் எப்.சி. அணி, மும்பை நகர எப்.சி. அணியை 5-1 என்ற கோல்கணக்கில் வென்றது.

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டியில் நேற்று சென்னை ஜவகர்லால் நேரு ஸ்ரேடியத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை மற்றும் மும்பை அணிகள் மோதின. தொடக்கத்தில் இருந்தே சென்னை அணி வீரர்கள் ஆட்டத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். 9-வது நிமிடத்தில் இலனோவும், 26-வது நிமிடத்தில் ஜிஜேயும் கோல்கள் அடித்து அணியை முன்னிலை பெறச் செய்தனர்.



அதன்பின்னர் 41 மற்றும் 44-வது நிமிடங்களில் வேலன்சியா அடுத்தடுத்து கோல்கள் அடிக்க, ஆட்டத்தின் முதல் பாதியில் சென்னை அணி 4-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் சென்னை வீரர்களே ஆதிக்கம் செலுத்தினர். ஆக்ரோஷமாக ஆடிய மும்பை வீரர்களின் கோல் முயற்சியை தடுத்தனர். இந்த பரபரப்பான ஆட்டத்தின் 69-வது நிமிடத்தில் கிடைத்த ப்ரீ கிக் வாய்ப்பில் சென்னை வீரர் இலனோ தனது இரண்டாவது கோலை பதிவு செய்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். கடைசி நேர போராட்டத்தில் மும்பை வீரர் செய்யது ரகீம் நபி (87-வது நிமிடம்) ஆறுதல் கோல் அடித்தார்.

இதனால், இறுதியில் சென்னை அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அத்துடன் புள்ளி பட்டியலில் 2-வது இடத்திற்கு முன்னேறியது. (க)

# விபுலானந்தன் ஞாபகார்த்த மின்னொளியிலான கூடைப்பந்தாட்டம் இறுதிப் போட்டி இன்று

யாழ்.மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை, அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்றாகும்.

யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம்பெறும் ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணியும் பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மோதவுள்ளது.

இதேவேளை நேற்று நடைபெற்ற 3-ம் இடத்திற்கான ஆண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மோதியது. இதில் 55/43 என்ற கணக்கில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வெற்றி பெற்றது.

நடைபெற்ற பெண்களுக்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி மோதியது.

இதில் 38/29 என்ற கணக்கில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. (க)

# பேரர் உளப் பாதிப்புக்களால்...

மேற்குறித்த அதிர்ச்சித் தகவலினை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புகள் குறிப்பாக குடும்பத்தவர்களின் உயிரிழப்புகள், காணாமல்போனோர், சொத்திழப்பு என்பன வடக்கு மாகாண தமிழ் மக்களினை மனம் சோர்விற்கு உள்ளாகியுள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் யுத்த இழப்புக்களிற்கு ஈடான உரிய தீர்வு அல்லது நிம்மதியான வாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை.

இதனால் யுத்தத்தினை எதிர் கொண்ட அதே மக்கள் யுத்தம் முடிவுற்ற பிற்பாடும் இறப்புகளின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களுக்கு உளவியல் தாக்கம் ஏற்பட்டு நோய்கள் இவர்களினை இலகுவில் பீடித்து அவர்களினை நோயாளிகளாக்குகிறது.

வடக்கில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினையும் எடுத்துக் கொண்டால் குடும்பமொன்றில் ஒவ்வொருவர் உயிரிழந்தோ அல்லது காணாமல் போயோ உள்ளனர்.

குறிப்பாக இங்கு குடும்ப சமூக கட்டமைப்பு உடைந்து போயுள்ளதால்தான் இவர்கள் நோயாளிகளாக இருந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது போதைவஸ்துப் பாவனை மிகக் கூடிய அளவில் அதிகரித்து காணப்படுவதற்கு காரணமாக யுத்த இழப்புக்களும் ஆனால் ஏற்பட்ட உளச் சோர்வும் இருக்கலாம்.

ஆகவே உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள மக்களிற்கு உரிய தீர்வொன்று கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைக்காவிடின் வடக்கு மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு அவர்கள் மேலும் நோயாளிகளாக மாற்றடையும் அபாய நிலை காணப்படுவதாகவும் மருத்துவர் சங்கம் எச்சரித்துள்ளது.

சாதாரண ஒரு மனிதனுக்கு உளச் சோர்வு காணப்பட்டால் நீரிழிவு, மாரடைப்பு, பாரிசவாதம், இதய நோய் என உயிரிழப்பினை ஏற்படுத்தக் கூடிய நோய்கள் இலகுவில் ஏற்பட்டுவிடும் எனவும் மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் யாழ்ப்பாண மருத்துவர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் முரளி வல்லிபுரநாதன், கனிஷ்ட உப தலைவர் வைத்தியர் நளாயினி ஜெகதீசன், செயலாளர் வைத்தியர் எஸ்.சுரேந்திரகுமார், வைத்தியர் கே. அஜந்தா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

# பாப்பாண்டவர்...

பாப்பாண்டவர் இலங்கைக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் விஜயம் செய்வார் என பாப்பாண்டவரின் இலங்கை விஜயத்திற்கான ஏற்பாட்டுக் குழுவின் விசேட செயலகத்தின் செயலாளர் சிறில் காமினி அருட்தந்தை தெரிவித்துள்ளார்.

பாப்பாண்டவரின் இலங்கை விஜயம் வெற்றிகரமாக அமைவதற்கு கடவுளை மன்றாடுமாறு கத்தோலிக்க பக்தர்களிடம் கோருவதாக அவர் தனது ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கத்தோலிக்க பேராயர் பேரவை தலைமையிலான குழுவினரே பாப்பாண்டவரின் இலங்கை விஜயம் குறித்த தீர்மானங்களை எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, பாப்பாண்டவரின் இலங்கை விஜயத்தை ஒத்தி வைப்பதில் கத்தோலிக்க பேராயர்களுக்கு உடன்பாடில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பாப்பாண்டவர் எதிர்வரும் ஜனவரி மாதம் 13-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். எவ்வாறெனினும், ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# ஐ.நா.கண்டனம்...

உட்படுத்தப்படுகின்றமை குறித்தும் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பீரிஸிடம் குறித்த ஐ.நா அதிகாரி கூறியதாகவும் இத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (செ-11)

# 164 கிராமங்...

மங்களுக்கு அதனை பெற்றுக் கொடுப்பதற்கான திட்டம் உள்ளிட்ட பல கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி,

வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் அங்கு 164 கிராமங்களுக்கு மின்சார வசதிகள் இல்லை. இதன்படி யாழ். மாவட்டத்தில் ஐந்து கிராமங்களும் வவுனியா மாவட்டத்தில் 23 கிராமங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 68 கிராமங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 49 கிராமங்களும் மன்னார் மாவட்டத்தில் 12கிராமங்களும் இவ்வாறு மின்சார வசதிகளற்ற கிராமங்களாக இருந்து வருகின்றன.

இக்கிராமங்களுக்கான மின்சார வசதிகள் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் நிவர்த்திசெய்யப்படும் என்றார். (செ-11)

# வடக்கில் இராணுவத்தை...

டைய நியாயமான கோரிக்கைகள் செவிமடுக்கப்படுவதற்கு வழியேற்படுத்தித்தரும் என கொழும்பில் செய்தியாளர் கூட்டமொன்றில் அவர் வலியுறுத்தினார்.

வட பகுதி மக்கள் மற்றும் வட பகுதிக்கு செல்லக்கூடிய மக்கள் ஆகியோரது நடமாட்டம் கண்காணிக்கப்படுவது, கட்டுப்படுத்தப்படுவது போன்ற விடயங்கள் குறைய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கைகளில் அதிகாரம் சென்று சேர உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கமலேஷ் ஷர்மா தெரிவித்துள்ளார்.

2013 நவம்பரில் கொழும்பில் நடந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுடைய மாநாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக இலங்கையுடன் இந்தப் பயணத்தில் தான் விவாதித்ததாக கமலேஷ் ஷர்மா கூறினார்.

பொதுநலவாயம் வலியுறுத்தியிருந்த பல்வேறு விழுமியங்களும் இலங்கையில் கூடுதலாக கடைப்பிடிக்கப்படுவது கண்டு தாம் மகிழ்ச்சியுற்றிருப்பதாக கமலேஷ் ஷர்மா தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்கு பின்னரான காலச் சூழலில் மனித உரிமை ஆர்வலர்கள் பாதுகாக்கப்படுவதற்கான வழிவகைகள் தொடர்பில் ஒரு விசேட கூட்டத்தை இந்தப் பயணத்தின் போது தாம் நடத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டத்தில், பொதுநலவாய அமைப்பு பங்களிப்பு செய்துள்ளதாகவும் அத்திட்டம் பொதுநலவாய அமைப்பின் நிபுணத்துவம் மற்றும் பங்களிப் போடு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் தேர்தல் ஆணையர் அலுவலகத்துக்கு சுயாதீனமாக செயல்படுவதற்கு போதுமான அதிகாரம் இல்லாமல் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டிய கமலேஷ் ஷர்மா, தேர்தல் ஆணையர் நியமனம் மற்றும் சுதந்திர செயல்பாடு தொடர்பில் பொதுநலவாயம் உருவாக்கிவருகின்ற நெறிமுறை வழிகாட்டியை தாம் இலங்கைக்கும் வழங்கப்போவதாக கூறினார்.

இலங்கையில் அடுத்து நடக்கக் கூடிய தேசிய மட்டத்திலான தேர்தலில் பொதுநலவாய கண்காணிப்பாளர்கள் பங்கேற்பது பற்றி இலங்கை அரசாங்கத்துடன் பேசியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தனது இந்த ஐந்து நாள் பயணத்தின்போது மகிந்த ராஜபக்ஷ, வெளியுறவு அமைச்சர் ஜி எல் பீரிஸ் நாடாளுமன்ற அவைத் தலைவர் சாமல் ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை ஆணையர், தேர்தல ஆணையர் உட்பட பலரை பொதுநலவாய தலைமைச் செயலர் கமலேஷ் ஷர்மா சந்தித்திருந்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுடன் நேரடிப் பேச்சு...

கையில், வடக்கு மாகாண சபையினை சிறந்த முறையில் நடத்திச் செல்வதற்கு மத்திய அரசு போதிய அதிகாரத்தினையும் நிதி வசதியையும் தருவதற்கு மறுத்து வருகின்றது.

யுத்தம் நிறைவற்ற பிற்பாடும் இராணுவ அச்சுறுத்தல் மிகுந்த சூழலுக்குள்ளேயே மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இராணுவம் எமது மக்களின் சொந்த காணிகளினை பிடித்து வைத்துள்ளதனால் யாழ்.மாவட்டத்தில இன்னமும் 17 முகாம்களில் 38 ஆயிரம் மக்கள் அகதி வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இந்தியா உட்பட வெளிநாடுகளில் உள்ள மக்கள் இன்னமும தமது சொந்த இடங்களிற்கு திரும்பாததற்கு காரணம் இங்குள்ள அச்ச நிலையேயாகும்.

அரசுடன் 18 முறைகள் பேசியும் தீர்வு எவையும் எட்டப்படவில்லை. இறுதியாக 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து வெளியேறிவிட்டனர்.

தற்போதும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசு அழைத்து வருகின்ற நிலையில் இனியும் பேச்சுவார்த்தையினை நம்ப தயாரில்லை.

பாராளுமன்ற தெரிவிக்குழுவில தீவிரவாத சக்திகள் அதிகம் உள்ளதனால்தான் தெரிவுக குழுவில் நாம் பங்கேற்க விரும்பவில்லை.

எனினும் அரசுடன் நேரடியாக பேசி அதில எட்டப்படும் தீமானத்தை பாராளுமன்ற தெரிவுக்குழுவில் வைத்து பேசுவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

அரசு மற்றும் இராணுவத்தின் அடக்குமுறைகள் அச்சுறுத்தலுக்கு மத்தியிலுள்ள எமது மக்கள் வடக்கு மாகாண சபையினை பெருவெற்றிபெறச் செய்துள்ளனர்.

ஆனால் மக்களின் தீர்ப்பினை மதிக்காமல் மாகாண அரசை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் முயற்சிகளில் தற்போது அரசு இறங்கியுள்ளது.

இதனோடுஒவ்வொருநாளும எமது மக்களின் காணிகளினை இராணுவம் அபகரித்து கொணடுள்ளமை விவசாயம், பொருளாதார நிலைமைகள் போன்றவற்றையும் அவுஸ்திரேலிய குழுவிடம் எடுத்துரைத்தோம என மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அவுஸ்திரேலிய அரசியல் உயர்ஸ்தானிகர் எட்வினா சிங்ளேயர், அவுஸ்திரேலிய அரசாங்க உயரதிகாரி மைக் கிளிமன்ட் மற்றும் இணைப்பாளர் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தரபபில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பனர் சிவஞானம் சிறிதரன், மாகாண சபை அவைத்தலைவர் ச.வ.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)


அமெரிக்க லொத்தர் விசா

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இந்த வருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இறுதி சந்தர்ப்பம் - உடனே விரையுங்கள்
இன்னும் ஒருசில தினங்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு பதிவுகள் இடம்பெறும்

கிளிநொச்சி
A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால்
0771516537

யாழ்ப்பாணம்
49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால்
0773867257

நெல்லியடி
முடக்காட்டுச்சந்தி
0776699892

வல்வெட்டித்துறை
யாழ்வீதி - வல்வெட்டி
0776697960

குறைந்த கட்டணத்தில் V2 Travels and Tours (Pvt) Ltd (C-8915)
● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா சேவை



MOBILE PHONE REPAIRING COURSE
(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)

நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா?
சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா?
வேலைசெய்துகொண்டுபகுதிநேரமாகவருமானம்ஈட்ட வேண்டுமா?

4 days course

புதுப் பொலிவுடன் யாழ்.நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு

திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000ற்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Ganesh.K

பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi Lane, Jaffna.T:P:-0217904468
MO:- 0777444225
(C-8911)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்) 136 நாடுகளில் 1040 கிளைகள் ஆசிரியர்கள் : யாழ் பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம் யாரும் படிக்கலாம் ஓரிரு மாதங்களும் படிக்கலாம் LETTRE & PHOTOCOPIES இலவசம்

ஆரம்பம் 02.11.2014

குறிப்பு வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே பொய் விளம்பரங்களை நம்பாதீகள்.

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கசசேரி → புகையிரதகடவை → AF or அரியகுளத்திலிருந்து ஸ்ரான்லிரோட் → AF



அவுஸ்ரேலியாவில் தலைமையகத்தைக் கொண்ட திசைகாட்டியின் பதவி வெற்றிடம்

I. உதவி முகாமையாளர் (அமைய அடிப்படை) ஆண், பெண் 50 வயதிற்குக்கீழ் கல்வித்தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மொன்றில் பட்டப்படிப்பு (HNDA Diploma ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது) வேதனம் 18000/- ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சி இருத்தல் அவசியம். 2 வருட சேவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். எவருக்கும் விதி விலக்களிக்கப்படமாட்டாது.

II. Clerk (குமாஸ்தா) பெண்கள் மட்டும் 50 வயதிற்குக் கீழ் வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். க.பொ.த உயர்தரத்தில் 3 பாட சித்தி ஆங்கில அறிவு மிகவும் அவசியம். 2 வருடசேவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு நேர்முகத்தேர்வு :- 31.10.2014 பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.
தொலைபேசி விசாரணைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செல்வி V. இந்துஜா
பிரதம நிறைவேற்று அதிகாரி
(C-8902)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## புலிகளின் தடை...

விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க முடியும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சரியாக புரிந்து கொள்ளாத விடயங்களின் அடிப்படையில் புலிகளின் ஆதரவாளர்கள் இந்தியாவில் அந்த அமைப்புக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கி கொள்ள முயற்சித்து வருகின்றனர்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளினால் ஐரோப்பிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை 4 ஆண்டுகள் விசாரித்த பின்னர் அண்மையில ஐரோப்பிய நீதிமன்றம் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியுள்ளது.

வழக்கில் பிரதிவாதிகள் புலிகளின ஆதரவாளர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை குறிப்பிட்டிருந்ததுடன், புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பல்ல என்றும் இறுதியில் வாதிட்டிருந்தனர்.

புலிகளின் அமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் செயற்பாடுகளை முன்னெடுக்க ஐரோப்பாவில் இடமளிக்கப்பட வேண்டும் எனவும் ஐரோப்பாவில் எந்த சந்தர்ப்பத்திலும் பயங்கரவாத செயல்களில் ஈடுபடவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்ப்பின் மூலம் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படவில்லை. அவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடை நீக்கப்பட்டுள்ளது.

இந்த பொருளாதார தடைநீக்கம் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் நிதி சேகரிக்கவும் மீண்டும் உறுப்பினர்களை சேர்க்கவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கான பெருமளவில் அவர்களால் பணத்தை செலவிட முடியும். இதன் அடிப்படையிலேயே ஐரோப்பிய நீதிமன்றம் தடையை நீக்கியுள்ளது.

இவ்வாறான வழக்கில் மேன்முறையீடு செய்யவும்தீர்ப்பை மீளாய்வு செய்யவும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

ஐரோப்பிய நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கினால், அது 27 நாடுகளுக்கு அந்த தீர்ப்பு செல்லுப்படியாகும். ஆனால், உண்மையில் ஐரோப்பிய நாடுகள் புலிகளுக்கு விதித்த தடையை நீக்கவில்லை. அந்த நாடுகளின் நாடாளுமன்றங்களே தடைகளை விதித்துள்ளன.

எனினும் ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து ஐரோப்பிய நாடுகளால் புலிகளுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

விடுதலைப் புலிகள் பிரித்தானியா, ஜேர்மனி போன்ற நாடுகளில பெருமளவில் பணத்தை சேகரித்து வருகின்றனர்.

இந்த நிலையில், வழக்கின் தீர்ப்பை பயன்படுத்தி வைகோ போன்ற இந்தியாவில் உள்ளவர்கள் உயிர்ச்சி பெற முயற்சித்துவருகின்றனர் எனவும இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


தேசிய பிரபல பயண ஒழுங்கமைப்பு நிறுவனம்
Nation Popular Travels & Tours
0773083820
கொழும்பு 0114378117
வவுனியா 0244930830
யாழ்ப்பாணம் 0214920920
www.nationtravels.com

கொழும்பு சென்னை 23900/= Return
கொழும்பு திருச்சி 22400/= Return
கொழும்பு டோகா 26000/= One way
கொழும்பு சிங்கபூர் 30500/= Return
கொழும்பு பிரான்ஸ் 45500/= One way
கொழும்பு சுவிஸ் 42000/= One way
கொழும்பு ஜேர்மனி 93500/= Return
கொழும்பு லண்டன் 39500/= One way
கொழும்பு கனடா 105700/= One way
(C-8914)


## குக்கர் தீவிபத்தில் சிக்கி...

குறித்த குடும்பப் பெண் நேற்று முனதினம் இரவு 8.00 மணியளவில் தனது வீட்டில் சமைத்துக் கொண்டிருந்த போது மண்ணெண்ணெய் குக்கரில் இருந்து தீப் பொறிகள் பறந்துள்ளன.

இதனை அவதானித்த அவர் சமையலறையிலிருந்த மண்ணெண்ணெய் கொள்கலனை வெளியே எடுத்துச் சென்றுள்ளார்.

இதன்போது குக்கரில் இருந்து வெளிவந்த நெருப்பு பொறி மண்ணெண்ணெய் கொள்கலனிலும் பற்றியதனால் உள்ளே இருந்த காஸ் சிலிண்டரிலும் தீபரவி பெரும தீ விபத்துள்ளானது.

இதில் குறித்த குடும்பப்பெண்ணிற்கும் உடல் முழுவதிலும் தீ பரவியதில் கடும் தீக்காயங்களிற்கு உள்ளான அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக கப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் வைத்து சிகிச்சை வழங்கப்பட்டது.

எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுக்காலை அவர் உயிரிழந்துள்ளார். மரணம் தொடர்பான விசாரணையினை திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-4)

## ஐ.நா.கண்டனம்...

கைது செய்யப்பட்டமை மற்றும் புலனாய்வுத்துறையினரின் தேவையற்ற விசாரணைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் இந்தக் கணடனம் தெரிவிக்கப்பட்டதாக இத்தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஐ.நாவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்கள் மீது நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட மாட்டாது என அரசாங்கம் ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் உறுதியளித்திருந்தது.

இந்நிலையில், இலங்கை அரசாங்கம் வழங்கிய இந்த உறுதிமொழிக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்று ஐ.நா அதிகாரி ஒருவர் கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த சில குடும்ப பெண்களும விடுதலை செய்யப்பட்ட போராளிகள் பலரும்விசாரணைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க....


ஊடகவியல்
2015 A/L Paper Class
(C-8910)
சனி, ஞாயிறு பிரிவு I – 7.00 am
ஆரம்பம் 01.11.2014 II – 9.00 am
என்.கஜிதரன் (B.A CHons) Spl.in. Media studies
பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம். இணுவில்



One Day Training
Isometric Drawing
Auto CAD
Date: 02-11-2014(Sunday)
Time: 9.00a.m - 2.00p.m
Venue: CAD Centre Hall
Registration: 8.30a.m (Sunday)
Resource Person: K.N.Mugunthan
Cert.in Auto CAD (2D&3D)
University of Peratheniya
Cert.in Auto CAD (Advance 3D Modeling)
University of Moratuwa
Contact No: 071-8617972
(C-8916)


## 164 கிராமங்...

என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் கடந்த செவ்வாய்க்கிழமை அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரமான சஜித் பிரேமதாசவினால் எழுப்பப்பட்டிருந்த கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாககேள்வ எழுப்பிய சஜித் பிரேமதாச எம்.பி.,

வட மாகாணத்தில் உள்ள மின்சார வசதிகளற்ற கிராமங்கள், மாவட்ட ரீதியாக உள்ள கிராமங்களின் எண்ணிக்கை, மின்சார வசதிகளற்ற சிர

19 ஆம் பக்கம் பார்க்க

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org